உ

சிவமயம்

நவாலியூர்ப்

# புலவர்மணியின்

# புகழ்மாலை

★

வெளியீடு :

காரைநகர் மக்கள்

ND

4-1-1976

T 1926

உ
சிவமயம்

நவாலியூர்ப்

## புலவர்மணியின்

# புகழ்மாலை

சண்முகம்
பாலசுந்தரம்
சுன்ன [illegible] குளி

★

894.811092
ILA

வெளியீடு :
காரைநகர் மக்கள்

4-1-1976

உ

வந்தியன் பிணையும் பிட்டையும் மாந்தி
வான்கரை யடைத்துல குய்ய
மந்திர மருந்து வழங்கிய மணிவா
சகரொடு மன்னவ னுக்கும்
அந்தமி லின்ப மளித்தமை யரசே
யளப்பருங் கருணையைக் காட்டும்
எந்தையே திண்ண புரத்தமர் சுந்த
ரேசனே வாழ்வெமக் கருளே.



புலவர்மணி சோ. இளமுருகனார்

தோற்றம் :
11-6-1908

மறைவு :
17-12-1975

புலவர்மணி, கவிசிந்தாமணி,

# பண்டிதமணி சோ. இளமுருகனார்

# வாழ்க்கைக் குறிப்புக்கள்

## 1. பிறப்பும் கல்வியும் :

புலவர்மணி இளமுருகனார், தமிழ் மரபு நிலைபெறவும், சைவ சித்தாந்த நெறி சால்புறவும் நல்லோர் பலரை ஈன்று புகழ் பெற்ற நவாலியம்பதியிலே, தமிழ் கூறும் நல்லுலகம் அன்போடு 'தங்கத் தாத்தா' என்றழைக்கும் சோமசுந்தரப்புலவர் அவர்களுக்கும் சின்னம்மையார் என்னுஞ் செந்தமிழ்த் திருவுக்கும் கீலக ஆண்டு வைகாசித் திங்கள் முப்பதாம் நாள் (11-6-1908) வியாழக்கிழமை தோன்றினார். இவருக்கு உடன்பிறப்பாளராக நடராசா, வேலாயுதபிள்ளை, மங்கையர்க்கரசியார், சரசுவதியார் என்போர் உதித்துப் பெருமை பெற்றனர். நவாலியூரிற் பிரபல கல்விமானாக விளங்கிய இராமலிங்க உபாத்தியாயர் நமது புலவர் மணிக்கு ஏடு தொடக்கி வைத்தார். வளர்மதியென வளர்ந்த இளமுருகனார், கிராமப் பாடசாலையிலே தொடக்கக் கல்வியை முடித்தபின் தந்தையார் ஆசிரியப் பணிபூண்ட வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ஆங்கிலமும், செந்தமிழுங் கற்றுத் தேறினார். தந்தையாரர்பால் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சோதிட நூலையும் கற்றுத் தெளிந்து, பொதிகை முனியெனப் பொலிவெய்தினார்.

## 2. பண்டிதர் விருதும், ஆசிரியப் பயிற்சியும் :

ஆண்டில் இளைஞராய், அறிவில் முதியரராய் விளங்கிய புலவர் மணி, ஆனைக்கோட்டை அரசினர் வித்தியாசாலை, கட்டுடைச் சைவத் தமிழ்ப் பாடசாலை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி என்பவற்றில் இளமைக் காலத்தே இருமொழி ஆசானாய்க் கடமையாற்றினார். ஆசானாக இருந்துகொண்டே தமிழ்ப் பண்டிதர் தேர்விற்குத் தோற்றிச் சித்திபெற்றுப் பண்டிதர் என்னும் விருதினைப் பெற்று மகிழ்ந்த இளமுருகனார், கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையிற் சேர்ந்து பயின்று, பயிற்சிபெற்ற ஆசானாய் வெளியேறினார்.

## 3. தமிழ்ப் பேரறிஞர்களின் ஆசியும் கேண்மையும் :

ஈழநாட்டிலே புகழ்பெற்று விளங்கிய சோமசுந்தரப்புலவரின் இல்லம் அந்நாளிற் கலைக்கோவிலாகத் திகழ்ந்து விளங்கியது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தமிழறிஞர்கள், புலவர்கள்

அங்கு வந்து செல்வது வழக்காறுய் இருந்தது. அங்ஙனம் வந்து மீள்வோர், இளமுருகனுரின் கூர்த்த மதியையும், ஆழ்ந்தகன்று தெளிந்த தமிழ்ப் புலமையையும் பாராட்டி மகிழ்ந்தனர். இவர், வித்துவசிரோமணி சி. கணேசையர், பண்டிதர் ம. வே. மகாலிங்க சிவம், பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ணபாரதியார் முதலிய ஈழத் தமிழ் அறிஞர்களுடன் நெருங்கிப் பழகினுர். அவர்களிடம் புதைந்து கிடந்த ஒப்பற்ற ஆற்றல்களையெல்லாம் தமதாக்கிக் கொண்டார். பரம்பரை பரம்பரையாக வளர்ந்து வந்த ஞானத் திருவைத் தந்தையாரிடமிருந்து பெற்றுக்கொண்டார். தென்ன கத்திற் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த தமிழ்ப் பேரறி ஞர்களான மறைமலை அடிகள், திரு. வி. க. முதலானேரின் தொடர் பும் வந்தெய்திற்று. இளவழகனுர் முதலான தமிழ் அறிஞர் களுடன் அஞ்சல் வழியே பழகிக் கேண்மை பூண்டுகொண்டார். புலவர்மணி அவர்களின் ஆற்றலும் அறிவும், மறைமலை அடிகளா ரைப் பெரிதுங் கவர்ந்தன. அடிகளார், முருகனுரிடம் அளவற்ற பேரன்பும் நம்பிக்கையும் உடையராய்த் திகழ்ந்தார்.

### 4. தமிழ் மரபோம்பலும், களம் பல காண்டலும்:

பண்டை நாளில் தண்டமிழ்ச் சான்றேர்களாற் கட்டி எழுப் பப்பட்டு, சிவஞானமுனிவர், ஆறுமுகநாவலர், சுன்னைக் குமார சுவாமிப் புலவர் முதலான செம்புலச் செல்வர்களாற் போற்றிக் காக்கப்பட்டு வந்த செந்தமிழ் மரபு சிதைந்து போதல் கண்டு, சிந்தை நொந்தார். சைவ சமயம் இந்து சமயம் என்ற போர் வையின் கீழ் வஞ்சிக்கப்படுவதை அறிந்தார். தனியொருவனுகத் தமிழ் மரபு ஓம்பும் பணியிற் குதித்தார். களம் புகுந்த புலவர் மணி, தமிழ் வரம்பழிக்கும் தகவிலோரையெல்லாஞ் சாடி, வெற்றிமாலை சூடிச் செந்தமிழ்த் தாயின் சிறுமை தீர்த்து மகிழ்ந்து நின்ருர். இவர், தமிழ்ப் பாதுகாப்புக் குறித்து எழுதிய கட்டுரை களும், கண்டனவுரைகளும் ஈழகேசரி, தினகரன் முதலிய வெளி யீடுகளில் வெளிவந்துள்ளன. ஆரியம், ஆங்கிலம் முதலிய அயன் மொழிச் சொற்களைத் தமிழ்நடைப் படுத்தி எழுதும் நிலையினை மீண்டும் நிலைநாட்டி வெற்றி கண்டார். தமிழ்க் கல்வி, இலக்கண பாடம் இன்றி வரம்பழிந்து போதல் கண்டு, அரசினரை அணுகி இலக்கண பாடத்திட்டம் வரைந்து, பாடநூல்களை ஆக்குவித்துத் தமிழுக்கு ஆக்கஞ் செய்தார்.

### 5. தமிழ் நெடுங்கணக்கும் புலவர்மணியும்:

தமிழ் நெடுங்கணக்கை மாற்றியமைக்கவும், சில செயற்கை ஒலிகளைப் புதுவதாகப் புகுத்தவும் தென்னகத்து அறிஞர்களும் செய்தித்தாள் ஆசிரியர்களும் முயன்றபோது, தனியொருவராய்

எதிர்த்து நின்று, பல்வேறு கட்டுரைகளை வரைந்து, கண்டனக் குரல் எழுப்பி, அவர்தம் முயற்சியைத் தடுத்து நிறுத்தினர். இவ் விவாதம் ஏறத்தாழ ஆறு திங்கள்வரை நிகழ்வுற்றது.

## 6. பாலசுப்பிரமணியனர் இளமுருகனர் ஆதல்:

பதினைந்தாம் அகவை முதற்கொண்டே தமிழின் தூய்மையை ஓம்பி, இலக்கண வரம்பிற்கு முரணுகாதவாறு, தனித் தமிழில் எழுதியும் பேசியும் வந்தவர் புலவர்மணி. ஒரு முறை சைவநெறி தொடர்பான விவாதம் ஒன்றிற் பங்குபற்ற வேண்டி வந்தது. அப்பொழுது இவருக்கு ஏறத்தாழ இருபது வயதிருக்கும். விவாதத்திற்குத் தலைமை தாங்கிய சைவப் பெரியார் ஒருவர், உம்முடைய பெயரை வடமொழியில் வைத்துக்கொண்டு, தனித் தமிழுக்காகப் பரிந்து பேசுவது எவ்வளவு அறிவீனம் என்று குறிப்பிட்டார். அவ்வளவுதான். இவர் தமது பாலசுப்பிரமணியம் என்னும் பெயரை இளமுருகனர் என மாற்றி அமைத்துக்கொண்டார். தலைவர் நாணமடைந்தார். இவர் வழியினைப் பின்பற்றி அறிஞர்கள் சிலரும், மாணவர்கள் பலரும் தமது வடமொழிப் பெயர்களைத் தனித் தமிழ்ப் பெயர்களாக மாற்றிக்கொண்டனர்.

## 7. திருமணமும் மகப்பேறும்:

இளமுருகனர் தமது முப்பதாவது அகவையில், கட்டுடைக் கிழார் வயிரமுத்து அவர்களின் அருமை மகளாரும், கட்டுடைச் சைவ வித்தியாசாலைத் தாபகரும், தமிழ்த் தொண்டருமாகிய சபாபதிப்பிள்ளை பி. ஏ. அவர்களின் மருகியுமான பண்டிதை பரமேசுவரியாரைத் தமிழ் மரபின்படி திருமணஞ் செய்து கொண்டார். இல்லறப் பயனய்ச் சோமசுந்தரபாரதி, சிவஞான சுந்தரம், காஞ்சனமாலையார் என்னும் மும்மணிகளைப் பெற்று மகிழ்ந்தார்.

## 8. தமிழையும் சைவத்தையும் காத்த சான்றோன்:

தமிழ்ப் பாதுகாப்பியக்க மொன்றை நிறுவி, முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தலைமை தாங்கி நடாத்திய எம் தலைவர், கலைச்செல்வ ஆக்கத்துறையிலும் அரிய சாதனைகளைப் புரிந்து பலரதும் பாராட்டைப் பெற்றுர். தந்தையாரை ஒப்பத் தமிழார்வம் கொண்ட இளைஞர்களுக்குத் தமதில்லத்தே சனி ஞாயிறு நாள்களிலும், கல்லூரி விடுமுறைக் காலங்களிலும் பாலபண்டித, பண்டித வகுப்புக்களை ஊதியம் எதுவும் எதிர்பாராமல் மிக்க ஊக்கத்துடன் நடாத்தி வந்தார்கள். அன்றியும் சாவகச்சேரி, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை முதலிய பகுதிகளிலும் வகுப்பு

களை நடாத்தியும், நடாத்துவோருக்கு ஊக்கமளித்தும் வந்தார்கள். இவரிடம் முறையாகத் தமிழ் பயின்று வரிசை பெற்ற தமிழறிஞர் பலர், இன்று ஈழத்தின் பல பாகங்களிலும் தமிழ்த் தொண்டு புரிகின்றனர். இளமுருகனார் தமிழ் மொழியுடன் மட்டும் நின்றுவிடாமல் சைவத் திருநெறியினை வளர்க்கும் பணியிலும் பாடுபட்டுழைத்தார். கொல்லங்கலட்டியிலே முதலியார்ப் பிள்ளை மடத்திலே வாரந்தோறும் சிவப்பிரகாசம், சித்தியார் முதலிய சாத்திர நூல்களையும், பெரியபுராணம் கந்தபுராணம் முதலிய புராணங்களையும், திருமுறைகளையும் நன்மாணவர் பலர்க்குப் பல்லாண்டுகளாகப் போதித்து வந்தார்கள்.

## 9. ஆசிரியர் பயிற்சிக் கழகங்களில் அருந்தமிழ்ப் பணி:

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் தமிழ்ப் புலமை நடாத்திய மகாலிங்கசிவம் அவர்கள் இயற்கையெய்தியபின் அப் பதவிக்கு மிகமிகப் பொருத்தமானவர் இவரேயெனக் கண்டு நியமிக்கப்பட்டார். இவர் பணியினால் அக்கழகம் பெருமை பெற்றது. புலவர்மணி, கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கழகத்தில் ஏறத்தாழப் பதினைந்தாண்டுகள் தலைமைத் தமிழாசிரியராகக் கடமை புரிந்துள்ளார். அக்காலத்தே பல ஆசிரியர்களையும், ஆசிரிய மாணவர்களையும், வண. குருமார்களையும் தமிழ் கற்கத் தூண்டிப் பண்டிதர் ஆக்கியுள்ளார். அதிபர் வண. சிங்கராயசுவாமிகள் ஓ. எம். ஐ., எம். ஏ. (இலண்டன்) அவர்களது வேண்டுகோளின்படி மகாகவி செகப்பிரியர் எழுதிய கமலேசன் என்னும் நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து நடிப்பித்து, அறிஞர்கள் யாவரது பாராட்டையும் பெற்றார். திருநெல்வேலிப் பரமேசுவர ஆசிரியர் கலாசாலையில் மாவை நவநீதகிருஷ்ணபாரதியாருடன் சேர்ந்து விரிவுரையாளராய்ச் சீரிய பணி புரிந்த இவர், கலாநிதி திரு. கு. சிவப்பிரகாசம் எம். எஸ்சி. அவர்களைத் திருவாசகத்தில் ஈடுபட்டுக் குழைவுறும் வண்ணம் செய்தார்.

## 10. தமிழுரிமைப் போரும் தலைவர் பணியும்:

தமிழ் மொழி, சைவத்திருநெறி என்பவற்றிற்கு மகத்தான தொண்டு புரிந்த கவிமணியவர்கள் உரிமை வேட்கையிலும் உறைப்புற்று நின்றவர். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் ஈழத்தில் நிலைபெற்று நின்ற தமிழ் மொழியின் உரிமை பறிக்கப்பட்ட போது பொங்கி எழுந்தார். தமிழ் அரசியற் கட்சிகளுடன் இணைந்து அல்லும் பகலும் அயராது பாடுபட்டார். அரசியல் மேடைகளை இளமுருகனாரின் சங்கநாதம் அழகு செய்தது. இயல்பான நகைச்சுவையோடு கூடிய அவரது அரசியற் பேச்சுக்களைக் கேட்கப் பொது மக்கள் பல்லாயிரவர் திரண்டு வந்தனர். தமி

மூர்வத்தைத் தட்டி எழுப்பி உரிமை வேட்கையை ஊட்டவல்ல பல எழுச்சி இலக்கியங்களைப் புனைந்தார். இவர் யாத்த திருமலை யாத்திரை, அறப்போர்க்கறைகூவல், இலங்கைமாதேவி திருப்பள்ளியெழுச்சி, குயிற்பத்து முதலியன மக்கள் மனத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துக்கொண்டன. அமரர் பண்டாரநாயக்கா முதலமைச்சராய் இருந்தபோது, தமிழின் அருமை பெருமைகளை அறிவுறுத்தி, உரிமைகோர முற்பட்டார். அதனால் தமிழின் தொன்மை, இனிமை, தெய்வத் தன்மை, இலக்கண இலக்கிய வளம், தமிழ்ப் பெருங்குடிகளின் தொன்மை என்றின்னவற்றை விளக்கிச் செந்தமிழ்ச் செல்வம் என்னும் உயரிய நூலை யாத்து, அதன் பொருளை ஆங்கிலத்திற் சுருக்கித் தந்து அனுப்பி வைத்தார். அந்நூல் இன்று சீரிய இலக்கியமாகத் திகழ்கின்றது.

## 11. பரிசிலும் வரிசையும் பாங்குடன் பெறுதல்:

ஓய்வு பெறுவதற்கு முன் தாம் கடமை புரிந்த உடுவில் மகளிர் கல்லூரியில் எக்காலத்தும் கண்டிராதவாறு தமிழ் உணர்வினை ஏற்படுத்திய ஆசிரியர், தமயந்தி திருமணம், அரிச்சந்திரன், மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய நாடகங்களை எழுதி, மாணவிகளைக் கொண்டு நடிப்பித்தார். இந்நாடகங்கள் கல்லூரிக்கு நல்ல பெயரை வாங்கித் தந்தன. புகழையும் பொருளையும் விரும்பாது ஓய்வொழிவின்றித் தமிழ்ப் பணிபுரிந்த புலவர் மணி, அறிவிலிகளைச் சாடித் தமிழ் மரபு பேணி நின்றார். அவர் விரும்பாதபோதும் பரிசில்களும் வரிசைகளும் அவரை நாடி வந்தன. அவற்றை விபரிப்பது மிகைபடக் கூறலாய் அமையுமேனும் 1936 இல் பயிற்சிக் கலாசாலை மாணவனாய் இருந்த காலத்திலும், கயரோகச் சிந்து பாடிய காலத்திலும் கிடைத்த தங்கப் பதக்கப் பரிசில்களைக் கூறாமல் இருக்கமுடியவில்லை. இவரின் தமிழ்ப் பணிக்காகப் பல சபைகள் பொன்னாடை போர்த்துப் பொற்கிழி வழங்கியுள்ளன. அன்றியும், தமிழ் அறிஞர்கள் இவருக்குப் புலவர் மணி வரிசை தந்து போற்றினர். ஆதீனங்கள், பட்டங்கள் தந்து கௌரவித்தன. காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன மகா சந்நிதானமாகிய சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் கவிசிந்தாமணி என்னும் வரிசையை நல்கிக் களிப்புற்றார்.

## 12. புலவர்மணியின் படைப்புக்கள்:

ஈழத்துச் சிதம்பர புராணம், செந்தமிழ்ச் செல்வம், பூரணன் கதை, இலக்கணச் சுருவளி, தொல்காப்பிய முதனூற் சூத்திர விருத்தி, செந்தமிழ் வழக்கு, அரங்கேற்று வைபவம், வேனில் விழா, கப்பற் பாட்டு, கவிதையியல், சொற்கலை, கயரோகச் சிந்து, சுருக்கெழுத்துச் சூத்திரம் முதலியன இவரின் சிறந்த

படைப்புக்களாகும். குறிஞ்சிப் பாட்டு, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மதுரைக்காஞ்சி, ஐங்குறுநூறு என்பன வற்றுக்கும் இவர் விளக்கவுரை எழுதியுள்ளார். தமயந்தி திருமணம், கமலேசன், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நாடக நூல்களையும் புலவர்மணி யாத்துள்ளார். இலங்கைமாதேவி, திருப்பள்ளியெழுச்சி, அறப்போர்க்கு அறைகூவல், திருமலை யாத்திரை என்பன இவரியற்றிய அரசியற் பாடல்களாகும்.

புலவர்மணியின் நூல்களுக்கெல்லாம் சிகரம் போன்று விளங்குவது ஈழத்துச் சிதம்பர புராணமாகும். அரசகேசரி யாத்த இரகுவமிசத்தின் பின்னரித் தோன்றிய அமரகாவியம் இப்புராணமேயென்பது பேரறிஞர்களின் முடிந்த முடிபாகும். இக்காவியம் பல்வகையழகும் நவரசங்களுந் ததும்பப்பெற்று, யாவரையுங் கவருந் தன்மைகொண்டு விளங்குகின்றது.

## 13. இறுதிக் காலம் :

அஞ்சா நெஞ்சுடனும், உடலுறுதியுடனும் தமது இளமைக் காலத்தைக் கழித்த புலவர்மணி இறுதிக் காலத்தில் நோயினால் உடல்நிலை தளர்ந்தாலும் மனவுறுதியுடன் தமது கடமைகளைச் செய்துவந்தார். இருந்தும் கடைசி நேரத்தில் நெஞ்சில் உண்டாகிய முட்டு இவரை இறைவன் திருவடி நிழலில் இலகுவாகச் சேர்த்துவிட்டது. ஏறக்குறைய 45 ஆண்டுகளாகத் தமிழையும் சைவத்தையும் தமது மூச்சாகக் கொண்டு பல சிறப்பட்ட நூல்களை ஆக்கியும், கட்டுரைகளை எழுதியும், சொற்பொழிவுகளை நிகழ்த்தியும் தமிழன்னைக்குப் பேரொளி கொடுத்துக்கொண்டிருந்த அணையா விளக்கு இராட்சத ஆண்டு மார்கழித் திங்கள் முதலாந் தேதி (17-12-75) இரவு ஒரு மணியளவில் அவிந்துவிட்டது. எனினும், அவர்தம் நன்மாணாக்கர்கள் அத்தனை பேரும் அவரை அடியொற்றித் தமிழ்த் தொண்டு செய்வாராயின் அச்சுடர் அவிந்திலது என்றும், அஃது ஒன்று பலவாய்க் கிளைத்துப் பேரொளி வீசுகின்றதென்றும் துணிந்து கூறலாம்.

புலவர்மணியின் ஆன்மா சாந்தியடையச் சுந்தரேசப்பெருமானதும் சௌந்தராம்பிகைப் பெருமாட்டியினதும் திருவடித் தாமரைகளை வணங்குவோமாக.

சாந்தி ! சாந்தி !!! சாந்தி !!!

தருமையாதீனப் புலவர்

**டாக்டர் சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச்டி.**

தமிழ்த் துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

இளமுருகன் இறையடிகள் சேர்ந்தா ரென்றே
இயம்பியசொல் இதயத்தே வேலைப் பாய்ச்சும்
குளமாகும் கண்ணிரண்டும் உள்ளம் சோரும்
கொடுங்கூற்றன் கண்ணிழந்து போயி னானே
வளமார்ந்த தமிழ்ப்புலவன் நவாலி யூரில்
வாழ்ந்திருந்த தமிழ்க்கோமான் உலகை விட்டு
களமாறிச் செல்கின்ற கூத்தன் போலக்
கைவிட்டுப் போயினதும் உண்மை தானே.

பொய்யாகா தாவிந்தச் செய்தி யென்றே
புகலுகின்ற உளமொருபாற் புலம்பி நிற்க
மெய்யாகக் கவியிதனை எழுது தற்கு
மேலோரே முயல்கின்றேன் இயல வில்லை
கொய்யாத பூவாகச் சிரித்து நின்று
குறுகிநின்று துணைவியொடும் என்னைக் கண்டு
ஐயாறு திங்களுக்குள் ளாக வில்லை
அகன்றனனே உலகைவிட்டு வையம் ஈதோ.

அவன்தந்த கையுறையாம் அரிய நூல்கள்
அழகாரும் நிலைப்பேழை தன்னில் நின்றே
அவன்நினைவை என்னோடும் கூறி நிற்க
அருந்துணைவன் பெரும்புலவன் புலமை யாலே
சிவன்உறையும் ஈழத்துத் தில்லை சீர்மை
செப்புகின்ற புராணத்தை மறக்கப் போமோ
தவத்துணைவி உரைவிரிக்க மலர்ந்து நின்ற
தமிழ்ப்பனுவல் இளமுருகன் புகழை நாட்டும்.

இனியமொழி பேசுவதில் இதயத் தோடே
இதயமாக் கலந்தரிய புலமை யோங்கக்
கனியைநிகர் கவிநலத்தை எடுத்துப் பேசிக்
கவருவதில் நவாலியூர் நம்பி வல்லான்
முனிவில்லான் உள்ளத்துக் கேற்ற பாங்கின்
முதறிவு வாய்ந்தமனச் செல்வி தன்னை
நனிதழுவும் இல்லறத்தான் இல்லை யானான்
நாவேநீ எவ்வுரையால் துன்பம் சொல்வாய்.

செந்தமிழின் திருப்பாட்டுப் புலவ நின்னை
 சிந்தனையில் இருத்திடுவேன் எந்த நாளும்
எந்தநாள் நினைக்காண்பேன் நின்து ணைவி
 இதயத்துத் துயரத்தை அவித்தற் கேற்ற
முந்துநெறி காணேன்யான் மாணுக் கர்பால்
 முத்தமிழாய் நிலைத்திருப்பாய் எந்த நாளும்
வந்திப்பேன் தமிழாலே வாழி ஐயா
 வளருகநின் புகழ்உருவம் கவிச்சொல் ஏற்பாய்.

ஈழத்துச் சிதம்பர பிரதமாசாரியர்

## சிவஸ்ரீ கு. மங்களேசுவரக் குருக்கள்

வேதசிவாகமங்களே சைவ சமய முதனூல்கள் என்பதைத் தாமியற்றிய ஈழத்துச் சிதம்பர புராணத்திற் பல இடங்களில் வலியுறுத்தியவர் நமது புலவர்மணி நவாலியூர் இளமுருகனார் அவர்கள். சைவக் கிரியைமீது அவர்களுக்குள்ள பற்றையும், நம்பிக்கையையும் ஷை புராண விழாவயர் சருக்க வாயிலாக நாமறியக்கூடியதாக இருக்கின்றது. சைவத் தமிழ்ப் பண்பாட்டிற்கு இறுதிவரை இலக்கியமாக விளங்கிய புலவர்மணி போன்ற ஒருவரை இலகுவிற் காணவியலாது.

## திருவாளர்கள் அ. ஆண்டியையா, து. முருகேசு

ஈழத்துச் சிதம்பர தேவத்தான கர்த்தர்கள், காரைநகர்.

சைவப் பண்பாட்டிற்கு நிலைக்களனாக விளங்கிய புலவர்மணி இளமுருகனார் அவர்கள், நமது நாட்டுப் பழக்க வழக்க ஒழுக்கங்களைத் தமது வாழ்வில் நிலைநிறுத்தியவர். மற்றையவர்களும் அவ்வாறே வாழ வேண்டுமென்பதைச் சமயம் நேரும்போதெல்லாம் வற்புறுத்திய பெருமைக்குரியவர். சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் நிரம்பிய இவர்களது புலமையை உரையாடும்பொழுதெல்லாம் நன்குக உணரமுடியும்.

## சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் பீ. ஏ.

தலைவர், வேதாகம சைவசித்தாந்த சபை,
'பிரமாலயம்', மாவிட்டபுரம்.

"தக்கார் தகவிலரென்பது அவரவர் எச்சத்தாற் காணப் படும்" என்னும் கூற்றிற்கிலக்கியமாய் விளங்கிய புலவர்மணி அவர்கள் நவாலியூரிலே பிறந்து, புலவர் மடியிலே தவழ்ந்து, கல்லூரிகளிலும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் திகழ்ந்து, சங்கங்களிலே தமிழ் முழக்கித் தமிழின் தூய்மையை நாற்றிசையும் பரப்பிய நன்மகன் ஆவர். நவயுக நக்கீரனாய் நற்றமிழ் வளர்த்தலையே மூச்சாகக்கொண்டு, நானிலம் நயந்து போற்றிய இளமுருகனாரின் சால்பெடுத்துக் கூற, எவர்தாமோ தரமுடையார்.

## காரைநகர், திரு. த. சோமசுந்தரம்

தலைவர்: யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை,
அனைத்திலங்கைச் சைவமன்றம்,
நாவலர் தருமப் பாதுகாப்புச் சபை,
ஈழத்துச் சிதம்பர புனித பிரதேசப் பாதுகாப்புச் சபை.

புலவர்மணி இளமுருகனார். நாட்டுப் பற்றும் தமிழ்ப் பற்றும் தமது உயிரெனக் கருதி வாழ்ந்தவர். ஈழத்திலே தமிழுக்குத் தக்க இடம் கொடுக்கவில்லை என்று பெரிதுங் கவன்று, தமிழின் பெருமையையும், பழைமையையும், மேன்மையையும் எடுத்துக் காட்டும் "செந்தமிழ்ச் செல்வம்" என்னும் நூலையாத்து, 91ஆம் பாட்டிலே, "முத்தமிழ்த் தாய்க்குச் செம்பொன் முடி கவித்திடுக" என்ற வேண்டுகோளை அரசினருக்கு விடுத்தவர்.

## வித்துவான், பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை

தும்பளை.

புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள், நிறைந்த செந்தமிழ்ப் பற்றும் சிறந்த சைவாபிமானமும் உடையவர். செந்தமிழ் இலக்கிய இலக்கணங்களை இளமை தொட்டு முறையாகப் பாடங் கேட்டு அவற்றில் ஊறித் தேர்ச்சி பெற்று முதிர்ந்து பழுத்த பெருந் தமிழறிஞர். சிறந்த தமிழ் ஆராய்ச்சியாளர். அவையோரைக் கவர்ந்து வசீகரிக்கும் இனிய பேச்சாளர். இவற்றின் மேலும் சிறந்த நூலாசிரியர். பழந் தமிழ் மரபு பேணிப் புராணம் என்ற வரிசையில் ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் அரிய நூலைப் பாடிப் புகழ் பெற்றுள்ளார். பழைய செய்யுள்களின் சொற் பொருட் சுவைகளை விளக்கிக் காட்டும் அவரது பேராற்றலை மெச்சாத அறிஞர் இல்லை.

## திரு. ந. சபாரத்தினம் பீ. ஏ.

யாழ். இந்துக் கல்லூரி முன்னைநாள் அதிபர்.

மக்கள் கவிஞர்கள் என்று கணம்பண்ணுவோர்களில் முதலிடம் வகித்த, ஆயிரக்கணக்கிற் பாடல்கள் பாடியவர் நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர். இப்பெரும்புலவரின் தவப்புதல்வன் புலவர்மணி இளமுருகனார். மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியைத் தனிமுறையில் நல்கிய பெரியார்.

தின்ன வரும் புலிதன்னையும் அன்போடு சிந்தையிற் போற்றிட வேண்டும் என்ற குறிக்கோளுக்கு அமைய வாழ்ந்தவர் பெரிய புலவர். ஆனால் மைந்தனோ கனல் கொட்டி எழுதியும், அனல் தெறிக்கப் பேசியும் மக்கள் இதயத்திற் பசுமரத்தாணி போலக் கருத்துக்களைப் பதிக்கும் ஆற்றல் படைத்தவர்.

நெருப்புமிழும் நெஞ்சத்துடன் பகைவர்களை எதிர்த்தபோதும் நெறியற்ற சொல்லொன்றும் அவர் எழுத்தில் இருந்ததில்லை. கவிதைக் கணைகள் கிளம்பியபோதெல்லாம் அவை கண்ணியத்தோடு கிளம்பின.

அப்பெரியாரைக் கடைசியாகக் கண்டு அளவளாவியவை எனது நெஞ்சில் இன்னும் பசுமையாகவிருக்கின்றன. ஈழத்துச் சிதம்பர புராண வெளியீட்டு விழாவில் அத்தல புராணத்தை மிகவும் பக்தி சிரத்தையுடன் பாடிய புலவர்மணிக்கு வரவேற்புரை வழங்கும் பாக்கியம் பெற்ற நான், இன்று அன்னாரின் மறைவைக் குறித்து மீண்டும் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்,

## சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம்

சமயப் பிரசார அமைச்சர், யாழ். சைவ பரிபாலன சபை.

இளமைக் காலத்திலேயே இளமுருகனாரின் ஒழுக்கம் விழுப்பந் தரும் என்பது தெள்ளெனத் தெளிவாயிற்று. இளமுருகனாரின் தமிழறிவும் சைவ ஞானமும் ஆழமானவை. இவரது வாழ்க்கை தமிழினதும் சைவத்தினதும் மரபைப் பேண அர்ப்பணமாயிற்று. கைப்பிடித்த துணைவியுடன் இணைந்து இயற்றிய "ஈழத்துச் சிதம்பர புராணம்" இத்தமிழ்க் குடும்பத்தின் தொண்டின் உச்சநிலையை எட்ட உதவிற்று.

## பண்டிதர் வ. நடராஜா
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

இன்றைய இலக்கிய பிரமாக்கள் மூன்று வகையினர்; தாம் நினைத்ததே பொருள்! அதனைக் கூறும் முறையே முறை என்ற இறுமாப்பிற் சிறுகவிதைகளையும், கதைகளையும் ஆக்குவோர் ஒரு வகையினர். "மக்கள் எவற்றை வரவேற்கின்றனரோ அவற்றைத் தருகின்றோம்" என்பது அவர்கள் வாதம். "இரசிகர்கள் விரும்புவதால் நாம் நிர்வாணக் காட்சிகளைத் தர முற்படுகிறோம்" என்று கூறும் சினிமா வெளியீட்டார் போல. இவ்வகை நூல்கள் அநந்தம்.

பழைய மரபு தவறாது உண்மைப் பொருளில் இக்கால நடை யமைவுடன் நூல்கள் செய்யும் இலக்கிய கருத்தாக்கள் இன்னொரு வகையினர். இவர்கள் தொகை கணிசமானது.

"தொன்மை மறவேல்" என்பதை இம்மியளவும் மறவாது "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போற் போற்றி", கட்டுரை, பாக்கள் புனைவோர் இக்காலத்து மிகச் சிலர். இவருள் இளமுருகனார் அவர்கள் முக்கியமானவர். சங்க காலப் பாக்கள் போன்று பொருள், ஓசை, மொழியமைவுடன் அவரது பாக்கள் தனித் தன்மையுடன் விளங்கின. தமிழ் தனது தூய்மையும் புனிதமும் இழக்கப்படக் கூடாதென்பது அவர் இலட்சியம். அவர் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தாயின் பாதுகாப்பின் தனித் தானைத் தலைவனாய் நின்றார்.

## திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர், இந்துசாதனம்.

செந்தமிழ்ச் செம்மையைச் சீர் குன்றாது பேணிச் செய்யுள் யாத்த புலவர் இளமுருகனார். இவர் அல்லும் பகலும் அன்னையாம் தமிழை அருச்சித்து வந்தவர். செந்தமிழ் வாழ்வு வாழ்ந்த செந்நாப் புலவர். இப்புலவர் பெருமணியின் தலைசிறந்த ஈகையாம் ஈழத்துச் சிதம்பர புராணம் செந்தமிழ்ச் சங்கப் பலகைப் பீடத்துக்கு உரியது என்று தயங்காமற் கூறலாம்.

## திரு. ச. ச. இராசரத்தினம்

**தலைவர், காரையபிவிருத்திச் சபை, கொழும்பு.**

தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதற்குத் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, அரும் பெரும் இலக்கிய சமய நூல்களை ஆக்கித் தமிழ் உலகிற்கு அளித்த தமிழ்ப் பேரறிஞர் புலவர்மணி இளமுருகனாரின் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

## திரு. எம். ஏ. கந்தையா

**தலைவர், சைவ மகாசபை, காரைநகர்.**

சோமசுந்தரப் புலவரின் தவப்புதல்வனும் இளமுருகனார் புலவர் மரபிற் பிறந்து, சிவநெறி மரபில் வளர்ந்து, தமிழ் மரபைக் காத்து, சைவ மதத்தை வளர்த்து, காவிய வரம்பு பிசகாது சொன்னயம், பொருணயம், அணிநயம் பொலிந்து விளங்கும் காவியம் இயற்றும் ஆற்றல் படைத்தவர். ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் தலபுராணத்தை மரபு வழுவாது இயற்றிப் பெருங் காப்பியக் கவிஞர் வரிசைக்கு ஏற்றமும் தோற்றமும் கொடுத்தனர். கல்வியிற் பெரியாராயினும் கல்விச் செருக்கும் வித்தகக் காய்ச்சலும் கனவிலும் அறியா மனவளம் வாய்க்கப் பெற்றவர். எளிய வாழ்க்கையும் உயரிய கொள்கையும் அணிகலனாய்க் கொண்டவர்.

## திரு. டி. டி. நாணயக்கார

**முன்னைநாள் காமினி மகா வித்தியாலய அதிபர், பாணந்துறை.**

புலவர்மணி இளமுருகனார், அளவற்ற தேசாபிமானமும் தமது தாய்மொழியான தமிழின்கண்ணுள்ள பற்றும், ஆசையும், திறமையும் காரணமாகச் சமகாலத் தமிழறிஞர்களிடையே முன் வரிசையில் வைத்து எண்ணப்பட்டார். மொழிப் பெருமைக்கு அவரால் இயக்கப்பட்ட "தனித்தமிழ் இயக்கம்" சான்று. சைவ சமயத்தைப்பற்றி அறியும் விருப்பும், பக்தியும் ஒப்புயர்வில்லாத அளவுக்கு இருந்தமைக்கு இவரியற்றிய ஈழத்துச் சிதம்பர புராணத்தைத் தவிர வேறு சான்று ஏதும் வேண்டுமோ? சிங்கள மரபின்படியும் அது ஒரு மகா காவியம் என்பது சைவ உலகத்துக்கு மட்டுமன்று, சிங்கள பௌத்தர்களுக்கும் தெரியும். அவரியற்றிய நூல்களுள் இரண்டொரு நூல்களையேனும் சிங்களத்தில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்கு ஆயத்தஞ் செய்ய முடியுமானால் அதுவே அப்பெரியாருக்குச் செய்யும் சிறப்பான அஞ்சலியாகும்.

## திரு. ஐ. தி. சம்பந்தன்

ஆசிரியர், காரைஒளி, கொழும்பு 6

தமிழர்களிடையே சமயப் பற்றை வளர்ப்பதற்கும், தமிழ்ப் பற்றை ஊட்டுவதற்கும் இன விடுதலைத் தாகத்தை ஏற்படுத்துவதற்கும் பேச்சாலும் எழுத்தாலும் செயற்றிறனாலும் பெருந்தொண்டாற்றிய தமிழ்ப் பேரறிஞராகிய புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்களின் மறைவு தமிழ்ச் சமுதாயத்திற்கு ஈடுஇணையற்ற பேரிழப்பாகும்.

"அறப்போருக்கு அறைகூவல்", "திருமலை யாத்திரை" போன்ற நூல்கள் மூலம் இனவுணர்வைத் தட்டியெழுப்பிய அன்னார் தமிழ் இதயங்களைவிட்டு என்றும் அகலார்.

## இரசிகமணி கனக. செந்திநாதன்

குரும்பசிட்டி.

ஈழத்தில் பண்டித வர்க்கத்தினர் குறை சொல்வதையே தொழிலாகக் கொண்டு தமிழுக்கு ஆக்க பூர்வமான நூல்களை ஆக்கி அளிப்பதில் பின்னிற்கின்றனர். பலர் ஒரு நூலையேனும் உருப்படியாக எழுதியதில்லை. ஈழத்தில் சமீபகால வெளியீடுகளை உற்று நோக்கும்போது ஒருவர் இந்தக் குறையை உடனே உணர்வர். அதற்கு மாறாக இளமுருகனார் அவர்கள், தாம் சொல்வதைச் செயலிற் காட்டியுள்ளார். மரபுவழி நின்று பல நூல்களை யாத்து நமக்கு அளித்துள்ளார். வெறும் கண்டனத்தோடு நின்றுவிடாமல், ஈழத்து இலக்கியவுலகுக்கு வளம் சேர்த்துள்ளார்.

ஈழத்துச் சிதம்பர புராணத்தில் இளமுருகனாரது கைவண்ணம் நன்கு பரிமளித்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தேன். பூரணன் கதையில் ஒரு புதுமையாக, கம்பராமாயணச் சொற்பொழிவில் துறைபோனவரும், கற்பனை நயம் மிக்கவருமாகிய மகாலிங்கசிவத்தையும், கவியின் உள்ளத்தைத் தெரிந்து விமரிசிப்பவருமாகிய பண்டிதமணி சி. க. வையும், விமரிசனத்துறையில் கைதேர்ந்த பொ. கிருஷ்ணபிள்ளையையும் தொட்டுக் காட்டிப் பாடிய இளமுருகனார் இப்புராணத்தில் ஆறுமுகநாவலரைக் காட்டுகிறார். அவரது ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து வாழும் இந்நாட்டு மக்களின் ஒழுகலாற்றையே ஆறாக உருவகித்துக் கூறுகிறார்.

அரசியல் நோக்கங்கள், மொழிமரபுச் சண்டைகள், பிறதாக்கங்கள், முற்போக்கு — பிற்போக்கு வாதங்கள் ஆகிய அளவுகோல்கள்தாம் ஈழத்து விமரிசனகாரரின் அளவுகோல்களாகி விட்டன.

சைவப் புலவர்,
## பண்டிதர் நா. ஏகாம்பரம்
வழக்கறிஞர், வட்டுக்கோட்டை,

ஈழத்துச் சிதம்பர புராணத்தைக் கவிஞர் பெருமானுகிய நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரின் பெருமகனுராகிய புலவர் மணி சோ. இளமுருகனுர் அவர்கள் செய்துள்ளார்கள். இந் நூலின் சில பகுதிகளைப் படித்தின்புறும் வாய்ப்புக் கிட்டியது. அவை சங்க நூல்களிற் பொதிந்து கிடக்கும் அகப்பொருட்டுறைக் கருத்துக்களையும் புறப்பொருட்டுறைக் கருத்துக்களையும் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலாகிய சிறந்த அணிகளையும் சித்தாந்த சாத்திரக் கருத்துக்களையுங் கொண்டு விளங்குகின்றது. இந்நூல் தமிழன்னைக்கு ஒரு சிறந்த அணியாக விளங்குமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

## திரு. வி. தருமலிங்கம்
பா. உ., உடுவில்.

ஈழத்திலே தமிழ் மக்கள் பன்னெடுங்காலமாகத் தமிழை ஆர்வத்துடன் போற்றி வளர்த்து வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கென ஓர் அரசையும் அமைத்துப் புலவர்களையும் ஆதரித்து வந்துள்ளனர். பல அரிய காவியங்களும் வைத்தியம், சோதிடம் முதலிய நூல்களும் அக்காலத்தில் ஆக்கப்பட்டுத் தமிழ் வளம்படுத்தப்பட்டுள்ளது. தமிழரசருடைய காலத்தின் பின் அந்நியர் ஆட்சிக்காலத்திலும் பல புலவர் பெருமக்கள் தோன்றித் தமிழை வளர்த்துள்ளனர்.

நம் கண் காண வாழ்ந்த புலவர்களுள் சோமசுந்தரப் புலவர் குறிப்பிடத்தக்கவர். சமயம், இலக்கியம், சிறுவர் இலக்கியம் ஆகிய துறைகளில் புலவருடைய பங்கு மிக முக்கியமானது அவருடைய புதல்வர் இளமுருகனும் தந்தையின் வழியில் நின்று பல அரிய தமிழ் நூல்களை ஆக்கி, ஈழத்திலே தமிழை வளம்படுத்தியுள்ளார். அவர் ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படுகின்ற காரைநகர்ச் சிவன் கோயிலுக்குப் புராணம் ஒன்று பாடியிருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

### வட்டுக்கோட்டைக் கந்தகோட்டம்
### திரு. க. கைலாயநாதன் பீ. ஏ.

ஈழத்துப் புலவர் வரிசையில் முன்னணி வகித்த முதுபெரும் புலவராகிய நவாலியூர்ச் சோமசுந்தரனாரின் வழித்தோன்றல் இளமுருகனாரின் புலமைக்கு மதிப்பீடு எதற்கு? புலமையெல்லாம் புலன்வழிச் சென்று, பொய்ம்மையாளரைப் பாடும் அவநெறியிற் புகாமற் சிவநெறியிற் புகுந்து ஈடும் எடுப்புமற்ற ஈழத்துச் சிதம்பர புராணம் பாடிய புலவர்மணி இளமுருகனாரின் சிவப்பணி தவப்பணியேயாகும்.

### சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

தெள்ளுதமிழ்க் கவிதைகளை அள்ளி அள்ளித்தந்த நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரைத் தமிழுலகமோ சைவ உலகமோ மறக்க முடியாது. அவர் குடும்பம் செந்தமிழிலே திளைத்த குடும்பம். சிவநெறிக்கு உழைத்த குடும்பம். அது ஒரு சைவத் தமிழ்க் குடும்பம். அத்தகைய குடும்பத்தின் மணிமுடியாகத் திகழ்ந்தவர்தாம் புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள். அவருள்ளம் சங்க இலக்கியங்களிலும், காவியங்களிலும் சுவை கண்ட உள்ளம். அதே போன்று திருமுறைகளிலே தோய்ந்த உள்ளம். நூல்களைக் கசடறக் கற்றுணர்ந்த புலமையாளர் அவர். இதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டுகிறது ஈழத்துச் சிதம்பர புராணம்.

### திரு. நா, முத்தையா
### ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

தமிழ் மரபைப் பேணிக் காத்து வந்த அறிஞர் பெருமக்களுக்குள்ளே ஒரு தனிப் பெருமை நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் குடும்பத்திற்குரியதாகும். புலவர் மகன் புலவராக விளங்குவதில்லை. காந்தி மகன் காந்தியாக வாழவில்லை. ஆனால், தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவனாரின் திருமகன் இளமுருகனார் தந்தைக்குச் சமதையான புலவராக விளங்கியமை தமிழ் மக்கள் எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

புலவர் குடும்பம் புலவரோடு மாத்திரம் மறைந்துவிடாமல், புலவர் குடும்பத்தை அடுத்த தலைமுறையும் மறவாமல் இருக்கச் செய்த பெருமை இளமுருகனார் அவர்களுக்குரியதாகும். காலத்தாற் சாகாத தமிழ் இளமுருகனாரது தமிழ். அவர் தமக்கென ஒரு தனிவழி வகுத்துக்கொண்டு, அதில் முன்னேறித் தமிழ்ப் பணி புரிந்தவர்.

## சைவமணி, வித்துவான் மு. சபாரத்தினம்

டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

தமிழ்கூறு நல்லுலகிலே வாழையடி வாழையாய் வாழ்ந்து, உலகப் புகழீட்டிய உத்தமர்களின் வரிசையிலே ஒப்பற்று விளங்கி, ஈழத்துச் சிதம்பர புராணக் காவியத்தை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டவரும், மறைமலையடிகளைப் பின்பற்றித் தனித் தமிழிலே தமது பெயர் நிறுவியவருமான மாமேதை இளமுருகனுருக்கு வரலாற்று ஏட்டிலே சிறப்பான இடமுண்டென்பதை எவரும் ஒப்புக்கொள்வர்,

## வித்துவான் மு. தம்பிராசா எம். ஓ. எல். .

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் நூலைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். ஆரவார நீர்மையதான இக்காலத்தில், திட்ப நுட்பஞ் செறிந்த நூலும் உரையும் காண்பதற்கு அரியனவாம் சைவசித்தாந்தக் கருத்துக்களைப் புலவர்மணி ஆங்காங்கு அமைத்துள்ள முறையும், அவற்றை அம்மையார் அவர்கள் எடுத்து விளக்கியுள்ள திறமையும் வியக்கற்பாலன. நீரோட்டம்போல் அமைந்த பாவோட்டமானது புலவர்மணி அவர்களின் கருத்துக்களைச் சுமந்து தங்கு தடையின்றிச் செல்கின்றது. சந்த இன்பம் வேண்டுவோர் இந்நூலைக் கற்பாராயின், அவ்வின்பம் கைவரப் பெற்று மகிழ்வர்.

என்னிடம் தொல்காப்பியம் கற்றுவரும் மாணவர்களுக்கு "நோக்கு" என்னும் செய்யுள் உறுப்புக்கு எடுத்துக்காட்டாக இந் நூலில் வரும் "வள்ளி கேள்வனை வண்டமிழ்ச் செல்வனை" என்று தொடங்கும் செய்யுளைக் காட்டுவதுண்டு.

இலக்கணத் திரைகள் செறிய, இலக்கியச் சோலைகளைத் தன்னிரு புறமும் விரித்துச் சந்த இன்பம் என்ற ஓசையோடு சைவ சித்தாந்தக் கருத்துக்கள் என்னும் மணிகளைத் தள்ளி, அளவை நூலாகிய தன்னிரு கரைகளையும் உடைக்காது பாதுகாத்துப் பழைமைக்கும் புதுமைக்கும் அமைத்த பாலங்களின் கீழே செல்லும் புலவர்மணியின் படைப்பான இவ்வியாற்றினை அடைந்தோர் இக்காலத்து மேற்படை நூல்களைக் கண்ட வெப்பம் தீரப்பெறுவர். சுருங்கக் கூறின், அக்காலத்துப் பேச்சாளர்களை வென்று நாவலர் என்ற பெருமையைத் தமக்கே உரித்தாக்கிய எமது ஆறுமுகநாவலப்பெருமானைப் போல இக்காலத்துக் கவிஞர்களை வென்று, பாவலர் ஆகிவிட்டார் நம் புலவர்மணி.

தமிழர் கூட்டணித் தலைவர்

## திரு. சா. ஜே. வே. செல்வநாயகம்

"தமிழுக்கு ஒரு தாத்தா — தங்கத் தாத்தா". அவர் செல்வம் இளமுருகனார் பிரிந்துவிட்டார் என்ற சோகச் செய்தி தமிழுக்குப் பேரிழப்பாகும்.

இளமுருகனார் வாழையடி வாழையாகத் தூய தமிழை வளர்த்துத் தமிழன்னைக்குக் காலத்தால் அழியாத சிறப்புத் தொண்டு செய்தார்.

ஒவ்வொரு தமிழனும் தன் அன்னையாம் தமிழுக்கு ஆற்ற வேண்டிய கடமையை, அவர் மறைந்தும் மறையாதவராகப் போதிக்கிறார்.

'ஆடவர் எவ்வழி நல்லர் அவ்வழி வாழிய நிலனே' என இளமுருகனார் நினைவால் துயருறும் நாட்டிற்கு ஆறுதல் கூறி, என் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றேன்.

## திரு. சு. இராசநாயகம் பீ. ஏ.

மானிப்பாய்.

இளமுருகனார் இளமைப் பராயத்திலேயே கவி பாடும் வன்மையை எளிதிற் பெற்ற உத்தம குணசீலராய் விளங்கினார். அவர் பல்வகை ஆற்றல்களும் நன்கு வாய்க்கப்பெற்ற செந்தமிழ்ப் புலவர். கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் நாவன்மையுடையவர்; இலக்கண இலக்கிய நூல்களை எண் பொருளவாகச் செலச் சொல்லுந் திறமையில் ஈடும் எடுப்பும் இல்லாதவர். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று அஞ்சாது எடுத்துரைக்கும் ஆண்மை மிக்கவர். சைவசித்தாந்தப் பனுவல்களின் செம்பொருளை நன்கு உணர்ந்தவர்.

புலவர்மணி அவர்கள் எமக்களித்த ஈழத்துச் சிதம்பர புராணம் திராட்சைப் பாகமாய் அமைந்துள்ளது. சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் நல்குவது; நவில்தொறும் நூனயம் பயப்பது; சைவ சமய நுண்பொருள்களும் பத்திச் சுவையும் யாங்கணும் விரவி நின்று, கற்போர் நெஞ்சைக் காமுறப்படுத்தித் திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனிதன்னைச் சிவமெனக் கண்டு, மெய்யன்போடு வணங்கச் செய்து, பேரானந்தப் பெருவெள்ளத்தில் அமிழ்த்தும் சிறப்புடையது. இந்நூலைப் படிக்குந்தோறும் புலவர்மணி இளமுருகனார் அவர்கள் ஒரு சாதாரண கவிஞர் அல்லர் என்பது புலனாகும்.

## திரு. வே. செல்வநாயகம்

**இணைச் செயலாளர், மணிவாசகர் சபை, காரைநகர்.**

ஈழத் தமிழகத்திற் பல்லாண்டுகளாக மணம் பரப்பிய மலர் உதிர்ந்துவிட்டது. தமிழினத்தினதும், தமிழ் மொழியினதும் பெருமை சற்று மங்கிக் கிடந்த காலத்தில், எமது மொழியின் பெருமையைப் பொதுமக்கள் மத்தியிற் பரப்புவதற்கு அயராது உழைத்தவர் புலவர்மணி அவர்கள். இன்றைய ஈழத்தில் தமிழ், தமிழினம் பற்றிப் பேசப்படுவதற்கு வித்திட்டு, மொழியினதும் இனத்தினதும் பெருமை காக்க முன்னின்று உழைத்தவர் அவர்.

எம்முடைய திருக்கோயிலுக்கு ஒரு தலபுராணத்தை ஆக்கி அளித்தவர் அவர். அவராற் பாடப்பட்ட ஈழத்துச் சிதம்பர புராணம் ஈழத்துச் சமய, தமிழ், இலக்கிய வரலாற்றில் எழுந்த ஒரு சிறந்த நூலாகும். எமது ஊரின் பழம் பெருமைகளையும், அவ் வக்காலச் சைவசமய வரலாற்றையும் புலவர்மணி இந்நூலில் அழகுற எடுத்துக் காட்டியுள்ளார். ஈழத்துச் சிதம்பரக் கூத்தனின் பெருமைகளையெல்லாம் சுவையுடன் எடுத்துக் கூறும் இந் நூல் கவிஞர் படைத்த ஒரு கவிக்கோயிலாகும். புலவர்மணியைத் தமது அருகிருத்தி ஈழத்துச் சிதம்பர புராணப் பாடல்களைக் கேட்க வேண்டும் என்ற பெருவிருப்பினாற்போலும், ஈழத்துச் சிதம்பரக் கூத்தன் அவரை இவ்வளவு விரைவாகத் தம்வசம் அழைத்துக் கொண்டான்.

## வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா

**மட்டக்களப்பு.**

சங்கநூற் பயிற்சியும், காவியத் தேர்ச்சி, புராண இதிகாச அறிவினுயர்ச்சி, தங்கத் தாத்தா வரை யாக்கப்பெற்ற பிரபந்தங்களில் ஊறித் திளைத்த உள்ளக் கிளர்ச்சி என்பவற்றின் பயனாக எழுந்த 'ஈழத்துச் சிதம்பர புராணம்'', சங்க நூல்களில் தனித்துவத்திற்கு ஆதாரமான ஈரெழுத்தொரு மொழிச் சொற்களினீட்டமும், சிந்தாமணி, சிலப்பதிகாரம் இவற்றிலுள்ள தீந்தமிழ்ச் சுவையும், கம்பனிற் காணப்படும் கற்பனை வளமும், சேக்கிழார் தந்த பத்தியும், தேவார திருவாசகங்களின் விதந்தோதப்பட்ட சைவ சித்தாந்தப் பொருளும் விஞ்சியும் மிஞ்சியும் செந்தமிழ் பயின்றோர்க்குப் பேரின்பம் பயப்பதாய் அமைந்து கிடக்க, அவ்வகைப் பயிற்சியற்றோர்க்கு உறுதுணையாகச் சொற்பொருள் விளக்கமும் காட்டப் பெற்று மூலமும் உரையுமாக உண்மைத் துணைவன், துணைவி என்ற இருவருடலில் ஓருயிர் நின்று ஊசலாட, உள்ளத்துணர்ச்சியே உருப்பெற்றதுபோல் அமைந்துள்ளது.

## திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை பீ. ஏ.

**சுன்னாகம்.**

ஈழத்துச் சிதம்பர புராணம் என்ற நூலை ஒரு முறை நோக்குவோரும் நூலாசிரியரது தமிழ்ப் புலமையையும் அருவி போல இழுமென்னொழுகச் செய்யுள் செய்யும் பேராற்றலையும் தெள்ளிதினுணர்வாரென்பது திண்ணம்.

## திரு. க. சி. குலரத்தினம்

**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

சென்ற நூற்றாண்டிலே தமிழ்நாட்டிலே தலபுராணஞ் செய்தவருள்ளே தலையாயவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையாவர். இந்த நூற்றாண்டிலே தலபுராணஞ் செய்வாரற்றிருந்த போது, ஈழநாட்டவர் ஒருவர் அதனை மிக அருமையாகச் செய்துள்ளார் என்ற பெருமைக்கும் பெருமிதத்துக்கும் காரணமாயுள்ளவர் செந்தமிழன்பும், சிவநேயமும் கொண்ட புலவர்மணி பண்டிதர் இளமுருகனாரேயாவர்.

## திரு. கே. ஏ. சிங்கராயர் ஓ. எம். ஐ.

புலவர்மணி இளமுருகனார் அவர்கள் இயற்றிய ஈழத்துச் சிதம்பர புராணமானது யாவர்க்கும் இறை உண்மையையும், பத்தியருட் சிறப்பையும், நல்வழி காட்டும் பண்பையும் தன்னகத்தே வைத்து விளங்குகின்றது. நாத்திகக் கொள்கைகளில் வேரூன்றிக் கடவுள் வழிபாட்டையும், மனிதப் பண்பையும் இழந்து உலக இன்பங்களைத் துய்த்து முத்திநெறி நாடாது வீணிலே உழலும் மாந்தர்க்கு அவர்களது மயக்கம் போக்கும் நன்மருந்து போன்றது.

ஒரு கவிஞன் மனிதரின் நற்பண்புகளை உள்ளீடாக வைத்து, அவைதம்மைப் புனைந்து இசை கூட்டிக் கற்றோரும் மற்றோரும் பழகும் நல்வாக்குகளிற் செய்யுள் யாக்க வல்லவனாய் இருப்பின் அவன் மக்கள் மனத்தில் அழியாப் பொருள்களை நினைவுறுத்துபவன் ஆவான் என்பது வெள்ளிடை. இந்நூலாசிரியரும் இங்ஙனே தாங்கூற எடுத்துக்கொண்ட பொருள்களைப் பலபடப் புனைந்து அழகுபடுத்தியுள்ளார். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வல்லபம் ஆன்ம வழிச் சென்று மக்களுக்கு நல்லுறுதி பயக்கின்றது.

## கலாநிதி சு. வித்தியானந்தன்
தமிழ்ப் பேராசிரியர், இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் திண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சுந்தரேசப் பெருமான் மீது ஈழத்துச் சிதம்பர புராணம் பாடப்பட்டது. இந்நூலின் ஆசிரியராகிய புலவர்மணி சோ. இளமுருகனார், கவிஞர் பரம்பரையிலே தோன்றியவர். தமக்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரின் கவிதை மரபினை அணி செய்யும் வகையிலே இந்நூலினை யாத்துள்ளார். ஆசிரியரின் செந்தமிழ்ப் புலமைக்கும், கவிதை ஆற்றலுக்கும், நாட்டுப் பற்றுக்கும், சைவசித்தாந்த அறிவுக்கும் தகுந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது இப்புராணம். பழைய இலக்கிய மரபுக்கு அமைய, பொருளுக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற சீந்தங்களைக் கொண்டு, பலவகை வனப்புடன் இலங்கும் இந்நூலை இயற்றிய புலவர்மணி சோ இளமுருகனார் அவர்களுக்குத் தமிழ் இலக்கிய உலகம் பெரிதுங் கடமைப்பட்டுள்ளது.

சிவநெறித் தொண்டர், அருள்நெறித் தொண்டர்

## திரு. க. க. சுப்பிரமணியம்
கொழும்பு.

ஈழத்துச் சிதம்பர புராணப் பாக்கள் வெறுஞ் செய்யுள்களாக அமையாமல், கவிதைகளாக, கடவுட்டன்மை மணக்கும் மணிகளாக ஆக்கும் வல்லமையைப் புலவர்மணியின் புராணத்திலே சிறப்பாகக் காண்கின்றோம். கவிதைகளில் அமைந்த எளிமையும், அழகும், உணர்வும் படிப்போரைக் கற்பனையுலகிற்கு இட்டுச் செல்கின்றது. அப்பொழுது ஒருவகையான விடுதலையையும் ஆனந்தத்தையும் அடைகின்றோம்.

## சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை
கொக்குவில்.

புலவர்மணி இளமுருகனார் அவர்கள் யாழ்ப்பாணத்தில் கல்வித் துறையிற் பலவலையான தொண்டுகள் செய்து வந்தவர். ஈழத்துச் சிதம்பர புராணம் பாடியவர். நெறியான வாழ்க்கையுடையவர். ஆசிரியராகக் கடமையாற்றியவர். எல்லோருக்கும் இனியவர். கேட்போர் மனங் கனியப் பிரசங்கஞ் செய்தவர். இத்தகைய பல சிறப்புக்கள் வாய்ந்த மெய்யன்பர் அவர்.

## பண்டிதர் வி. சி. கந்தையா பீ. ஓ எல்.

மட்டக்களப்பு

காரைநகர்த் திண்ணபுரத்துச் சுந்தரேசுவரப் பெருமான் மீது பத்தி நலங் கனிந்து புராணம் ஒன்று பாடினர் புலவர் மகன் புலவரான இளமுருகனர். அவருடைய கவிதைச் சிறப்புக்களைக் குறித்து நாம் வியப்பதற்கு யாதும் இல்லை. அவர் பரம்பரைப் புலவர்; தமிழ் இலக்கணப் பேரறிஞர்; இலக்கியப் பெருங் கடல்; சைவம் பழுத்த பழம்; சீலமும் அறநெறியுங் கடவாத செம்மல். அத்தகைய பெரியார் நமது சிதம்பர தலத்துக்குத் திருப்புராணம் பாடியமை சைவ மக்கள் அனைவருஞ் செய்த தவப் பயனே.

## தேவன் — யாழ்ப்பாணம்

புனிதம் மிகுந்த ஈழத்துச் சிதம்பரத்துக்கு இருபதாம் நூற்றுண்டில் புராணம் யாக்கப்படுவதைப் புதுமையென்பதா, அல்லவென்பதா!

இலௌகீகத் தேவைகளை மேலாய்க் கருதும் இந்நூற்றுண்டில், இலக்கியமும் சமயமும் சமூக உணர்வு வெளிப்பாட்டை மட்டும் பிரதிபலிக்க வேண்டும் என்று கருதுவோர் மலிந்துள்ள காலத்தில் இந்நூல் மலர்வது வியப்புத்தான்.

ஆனல், “உலகையிந்நாள் நலித்திடு நாத்திகப் பேய் குனித்திடாதகன்றதன்றே” என்று புலவர் புகழும் காரைநகர் இப்பணியில் ஈடுபட்டது வியப்பன்று.

யாத்தவர் நல்ல தமிழ்க் காவலர்; பாவலர்; மரபு பிறழாதவர். ஆயினும் பழைமையிற் புதுமை காண்பவர். யாப்பில், அமைதியும் எளிமையும் தவழ்கின்றன. இலக்கண வழுவுக்கு இடமேயில்லை. மொழித் தூய்மை இனிமை கூட்டுகிறது.

பணம் இருந்தென்னை! வருங்காலப் பரம்பரைக்கு விட்டுச் செல்லக்கூடிய செல்வங்கள் இப்புராணம் போன்ற நூல்களன்றே!

## திரு. க. சிற்றம்பலம்

தலைவர், தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிந்து, கூட்டரசாங்கம் பதவியேற்ற பின்னர் இன, மத வேறுபாடின்றித் தமிழ் பேசும் மக்களின் இதயங்களிற் குடிகொண்டுள்ள ஒப்பற்ற தலைவரும், அரசியல் ஞானியுமாகிய தந்தை செல்வா அவர்கள், பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில், “தமிழ் மக்களுக்குக் கடவுள்தான்

வழிகாட்டவேண்டும்" என்று கூறியிருக்கிறார். இது, தமிழ்ப் பேசும் மக்களது நிலை இந்த நாட்டிற் பாதுகாப்பற்றதாய் வந்துகொண்டிருக்கின்றது என்ற கருத்தைக் காட்டுகின்றது. இது அரசியல்.

தமிழ் மொழியின் வளத்தையே தமது வாழ்க்கைக் குறிக் கோளாகக்கொண்டு வாழ்ந்த புலவர்மணி இளமுருகனார் அவர் கள், தாம் பாடிய ஈழத்துச் சிதம்பர புராணத்தில் (1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் புராணம் பாடப்பட்டது.) விழாவயர் சருக் கம் 159 வது செய்யுளில்,

"............ தமிழைச்
சேவமர் செல்வா புரந்தனை, இன்றும்
செந்தமிழ் புரப்பதுன் னருளே" என்று பாடுகின்றார்.

அரசு காவாமையால், அநாதையாய்ப் புகலின்றி நின்ற தமி ழின் நிலையை நன்குணர்ந்து, மனமுருகிச் சுந்தரேசுவரப் பெரு மானை வேண்டுகின்றார் அவர். காப்பவரில்லாக் கையறு நிலையிற் கடவுளை வேண்டுவது இயற்கை. இத்தன்மையை ஈரிடத்துங் காணக் கூடியதாய் இருக்கின்றது.

## பிரமஸ்ரீ கி. லக்ஷ்மண ஐயர் எம். ஏ.

வித்தியாதிபதி, தமிழ்ப் பிரிவு, கல்வி அமைச்சு.

சென்ற பல ஆண்டுகளாக, நமது நாட்டிலே தமிழ் மொழி பற்றியோ, தமிழ் இலக்கியம் பற்றியோ, முக்கியமாகத் தமிழ் இலக்கணம் பற்றியோ பிரச்சினைகளும் ஐயங்களும் எழும்போ தெல்லாம் அவற்றைப் பற்றி அபிப்பிராயங்கள் வெளியிடுவதற் கும், விளக்கங்கள் தருவதற்கும் சிறந்த தகுதியும் மிகுந்த ஆற்ற லுமுடையவராகப் பலராலும் மதிக்கப்பட்டவர்களுள் மிக முன் னணியில் நின்றவர் பண்டிதர் சோ. இளமுருகனார். அவருக்கு இயல்பாக அமைந்திருந்த ஆற்றலும், அவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், பல துறைப் பயிற்சியுமே அவரை இத்தகைய உயர்ந்த மதிப்புக்கு உரியவராக்கின. சிற்சில சமயங்களில் அவர் வெளியிட்ட அபிப்பிராயங்கள் அறிஞர்கள் மத்தியில் அவரையே வாதப் பிரதி வாதங்களுக்குரிய பொருளாக்கியதுமுண்டு. இதுவும் அவருடைய தனிச் சிறப்புக்கும் தனித்துவத்துக்கும் தக்க சான்றுகளாகும்.

தனித் தமிழிலும் சைவ சித்தாந்தத்திலும் ஏற்பட்ட உறுதி யான பற்றின் விளைவாகவும் பாரம்பரியமும் சூழலும் அளித்த அனுபவங்களின் விளைவாகவும் தமக்கென ஒரு தனித்துவத்தை வகித்துக்கொண்ட பண்டிதர் அவர்கள் இன்னும் பல ஆண்டு

தமிழுக்கும் சைவத்துக்கும் பல அரும் பணிகளைச் செய்துகொண் டிருப்பாரென நம்பியிருந்த சமயத்தில் திடீரென அவர் மறைந்த செய்தி பெரும் வேதனையைத் தந்துள்ளது.

இச்சந்தர்ப்பத்திலே, பண்டிதர் இளமுருகனர் அவர்கள் அண்மையிலே வெளியிட்ட "ஈழத்துச் சிதம்பர புராணம்" என் னும் அரிய நூல் இலங்கையிலுள்ள மகா வித்தியாலய நூல் நிலையங்கள் பலவற்றிலும் இடம் பெறவும், அதன் மூலம் அவரு டைய அரும் பணி பயன்படவும், புகழ் நிலவவும் சிறிதளவாவது வழி வகுப்பதற்கும், பண்டிதர் அவர்களுடைய சைவப் பணியோடு சிறிதாவது தொடர்புகொள்வதற்கும் அண்மையில் எனக்குக் கிடைத்த வாய்ப்பை நினைத்து ஓரளவு ஆறுதலடைகிறேன்.

## கலாநிதி ச. தனஞ்சயராசசிங்கம்

தமிழ் இந்துப் பண்பாட்டுத்துறை,
வித்தியாலங்கார வளாகம்.

ஆறுமுகநாவலர் தொடக்கிய தமிழ் மரபிற்றேன்றியவர் பண்டிதர் சோ. இளமுருகனர், வடமொழியில் ஆழ்புலமை பெற் றிருந்தும் தனித் தமிழிற்கே உழைத்தார். அவரின் மறைவு ஈழத்திற்குப் பேரிழப்பாகும்.

## ஸ்ரீ. சி. சிவசரவணபவன் பீ. ஏ.

(சிற்பி)

அதிபர், உசன் இராமநாத மகா வித்தியாலயம்.

பழகுவதற்கு இனியவர்; பண்பு நிறைந்தவர்; சைவமும் தமிழும் சேர்ந்து கலந்த உருவினர்; நல்ல கவிஞர்; மாற்றுக் கருத்துடையோரையும் தமது நண்பர்களாக ஏற்றுக்கொள்ளும் இயல்பினர்; இவர்தாம் தங்கத் தாத்தாவின் தகுதியான வாரி சான புலவர்மணி இளமுருகனர் அவர்கள்.

செந்தமிழ் மொழி என்றும் இளமையுடனும் எல்லா அழ குடனும் பொலிய வேண்டுமெனில், அதன் சீரிய மரபு சிரத்தை யுடன் பேணப்படல் வேண்டும் என உண்மையாக நம்பி, அந்த நம்பிக்கையுடன் இறுதிவரை உறுதியாகச் செயற்பட்டவர் அவர். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்பதை ஏற்றுக் கொண்டவர்; பழையன கழித்தலையும் புதியன புகுத்தலையுமே எதிர்த்து நின்றவர்; யாப்பமைதியும், பொருளாழமும், இலக்கிய நயமுமுடைய எண்ணற்ற கவிதைகளைப் புனைந்து, தமிழ்த் தாயை அணி செய்தவர்; தமிழ் மரபு சம்பந்தமாக அவருடன் வேறு

பட்டவர்களும் அவருடைய கவிதா ஆற்றலுக்குத் தலைவணங்கினர். சைவப் பண்பும் தத்துவக் கருத்தும் கற்பனைச் செழிப்பும் சொல்வளமும் ஓசைச் சிறப்பும் காவிய நயமும் விரவிய "ஈழத்துச் சிதம்பர புராணம்" அவருடைய கவிதா சக்தியின் கொடுமுடி எனலாம்.

தமிழுக்குத் தொண்டு செய்வோன் என்றும் சாவதில்லை. மரணத்தை வென்றவர் அமரர். புலவர்மணி இளமுருகனர் அமரராகிவிட்டார். அழிக்க முடியாத் தமிழ் மொழியில் அசைக்க முடியாத் தனியிடம் அமரர் இளமுருகனருக்குண்டு.

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

கலாசாலை வீதி, திருநெல்வேலி.

பண்டிதர் சோ. இளமுருகனர் அவர்களுடைய பாடல்கள் சின்னத்தம்பிப் புலவர், முத்துக்குமார கவிராயர், சோமசுந்தரப் புலவர் என்றிவர்கள் பாடிய அதிமதுரமான பாடல்களின் வரிசையில் வைத்து எண்ணத் தகுந்தவை.

## திரு. க. தி. சம்பந்தன்

திருநெல்வேலி.

இளமுருகனர் அவர்கள் புகழத்தக்கவர்; புகழாளர். அவர் புலவர் மரபினர். அவர் தந்தையார் உலகு போற்றும் பெரும் புலவர்; முனிவரர். அவருக்குக் கவிதை பிதிரார்ச்சிதம்; பூர்வ சம்பத்துமாகும். அவர் எல்லாவற்றையும் பாடினர். அவை மக்களைக் கவரக்கூடியவை. கடைசியில் தெய்வீகத்தையும் நூல் செய்தார்.

## திரு. செ. தனபாலசிங்கன் பீ. ஏ. (இலண்டன்)

உதவித் தொழில் ஆணையாளர்.

ஈழத்துச் சிதம்பர புராணம் சைவசித்தாந்திகட்கு வரப்பிரசாதம்; இலக்கிய இரசிகர்களுக்குப் பெருவிருந்து; இலக்கணங் கற்போருக்கு அருந்துணை; உரைகாரருக்கும் சொல்லாராய்ச்சியாளருக்கும் கலங்கரை விளக்கம். ஆம்! அந்நூல் கற்பகதரு. அந்தக் கற்பகதருவை நல்கிய புலவர்மணி சாகமுடியுமா? புற உடல் மறைந்தது. ஆனல், புலவர்மணியின் ஆத்மசோதி பூமி சூரியசந்திர நட்சத்திரங்கள் உள்ளளவும் ஒளி வீசும். அவர் புலமையை எண்ணிக் கவிதை திகைக்கிறது! காவியம் திணறுகிறது!

## பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். ஏ., பீ. ஓ. எல்.

**பா. உ., ஊர்காவற்றுறைத் தொகுதி.**

எதிர்பாராத பேரதிர்ச்சி தரும் சில நிகழ்ச்சிகள் மக்களைப் பெரிதும் பாதிப்பது உண்டு. புலவர் மாமணி இளமுருகனாரின் மறைவு எனக்கு ஒரு பெரும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. புலவர் மாமணி நோய்வாய்ப்பட்டிருந்தாரெனினும், தமிழ் இனத்தையும், தமிழ் மொழியையும் பெரிதும் பாதிக்கும் நிகழ்ச்சிகள் குறித்து இடையிடையே எனக்கு எழுதும் முடங்கல்கள் வாயிலாக என்னுடைய முயற்சிகளை ஊக்குவார்.

அவருடைய மறைவு செந்தமிழுலகுக்கும், சிவநெறிக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழிலும் சைவத்திலும் ஆழ்ந்தகன்ற புலமையும் அசையாத சுடுபாடும் உடையவர் அவர். தமிழை முறையாகக் கற்று நிறைந்த தமிழ்ப் புலமை பெற்றவர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் இலைமறை காய் போலச் சிலரே உளர். இச்சிலரில் முன்னணியில் இலங்கியவர் அவர். தமிழை இழிவுபடுத்துவோரை — கொலை செய்வோரை — கண்டிப்பதற்கு அவர் சிறிதும் அஞ்சுவதில்லை. வழுக்களின்றி வாக்கியங்களை எழுத முடியாதவர்கள் 'தமிழ் அறிஞர்கள்' என்றும், 'எழுத்தாளர்கள்' என்றும் ஆர்ப்பரிப்பதைத் தாங்கிக்கொள்ள முடியாத தமிழ் உணர்ச்சி மிக்க உள்ளம் படைத்தவர் அவர். அவருடைய பேச்சு, உரை, பாட்டு முதலியன யாவும் தனித்தன்மை வாய்ந்தவை. இலக்கிய உலகில் தமக்கென ஒரு தனி வழியை வகுத்துக்கொண்ட பெரும் புலமையாளர் அவர். எது சிறந்தது; எது நலலது; எது உயர்ந்தது; எது பொருத்தமானது என்று அவர் உறுதியாகக் கருதுகின்றாரோ, எத்தகைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமலும் எவருடைய முகத்தையும் பார்க்காமலும் அதனை அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்து நிலைநாட்டும் துணிவு உடையவர் அவர்.

அவருடன் நான் பல ஆண்டுகள் பழகியுள்ளேன். கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் அவருடன் நானும் விரிவுரையாளராகக் கடமையாற்றினேன். சைவ சமயச் சார்பான சில கொள்கைகளில் அவருக்கும் எனக்கும் முரண்பாடு முன்னர் இருந்தது. இதனால் நாங்கள் இருவரும் சொற்போர் நடத்தியுள்ளோம். எனினும், எங்கள் கேண்மையும் அன்பும் சிறிதும் பாதிக்கப்படவில்லை. சில கொள்கைகளில் முரண்பாடிருப்பினும், அதனால் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் எங்களைப்போல நண்பர்களாக இருந்தவர்களைக் காண்பதரிது.

இத்தகைய பேருள்ளம் படைத்த நண்பரை — தமிழ்ப் பெரும் புலவரை — எதிர்பாராமல் இழந்த பெருந் துன்பம் விரைவில் துடைக்கத் தக்கதன்று.

இலங்கையிலே தமிழை அரியணை ஏற்ற வேண்டுமென அவருடைய உள்ளம் துடித்துக்கொண்டிருந்தது. இதனைப் பலமுறை அவர் ஆர்வம் ததும்ப எனக்கு எடுத்துரைத்துளார். அவருடைய ஊனோடும் உயிரோடும் கலந்து மலர்ந்த இந்த எண்ணத்தை, "தமிழ் ஈழத்தினை" விரைவில் உருவாக்கி நிறைவேற்றுவதே தமிழ் மக்கள் அவருக்குச் செய்யத்தக்க கைம்மாறாகும்.

சித்தாந்தப் புலவர்,

**வித்துவான் க. ந. வேலன் பீ. ஓ. எல்.**

பண்டிதர் இளமுருகனார் ஈழத்திலே தோன்றிய மறைமலை. தமிழின் தூய்மை காக்க இலக்கண வேலேந்தி இளமுருகன் வீதி வருவான். அப்பொழுது "நாமமது தமிழரெனக் கொண்டிங்கு" வாழும் அன்னியம் நடுங்கும். மாசு மறுவில்லாத் தமிழறிவும் தமிழ்ப் பற்றும் அஞ்சாமையுமுடைய அவர் தமிழாற் செய்யும் அர்ச்சனையே ஈழத்துச் சிதம்பர புராணமாகும்.

## பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை

வியாபாரிமூலை.

திண்ணபுரச் சிவனார் மீது அருமை வண்ணப் புராணக் காப்பியமியற்றி, மண்ணுடல் மாயவும் புகழ் அழியாப் பெருமகனாகி விட்டரார் கவிமரபுகள் நன்கறிந்த இளமுருகனார். அவர் பல வகைக் கவிகளும் அருமை மிக யாத்துள்ளார். அவர் தந்த 'வேனில் விழா' என்னும் நூல், படிப்போரைக் குலுங்க நகைக்க வைக்கும் பான்மையது. நினைத்தவுடன் பாவியற்றும் வாணி தேவியின் பெருநலங் கனியப் பெற்றவராகையால் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு இவர் செய்துள்ள தொண்டு செப்பருஞ் சிறப்பினது. கவிஞர் வகைக் கவிதைகளும், கண்டனங்களும், தமயந்தி திருமணம் முதலான நூல்களும் இவர் நமக்கு விட்டுச் சென்றுள்ள பெருஞ் சொத்துக்களாம். தேவருலக அமிழ்தை விஞ்சிய கவிதை வளங் காட்ட, விண்ணவர் வேண்ட வானுலகு போந்துள்ளார் இளமுருகனார்.

## திரு. க. க. நடராசா

அதிபர், இந்துக் கல்லூரி, காரைநகர்.

புலவர்மணி இளமுருகனார் அவர்கள் ஈடிணையற்ற கவிஞர்; தன்மானத் தமிழனாக வாழ்ந்து வந்தவர்; பழந்தமிழ் இலக்கியப் புலமையும், செந்தமிழ்க் கவித்துவமும் ஒருங்கிணையப் பெற்றவர். அவர்கள் சைவத் தமிழுலகிற்கு விட்டுச் சென்ற பெருஞ் செல்வங்களுள் ஈழத்துச் சிதம்பர புராணம் தலையாயது.

## பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை

சரம்பொன்.

ஈழமணித் திருநாட்டில் தமிழ் மரபைக் கட்டிக் காத்து வந்த ஒரு பெருமரம் சரிந்துவிட்டது.

சிறுகதைகளாயிருந்து நாவலாக முற்றுப் பெற்றதுபோல அவரது கவிதை முடிந்துவிட்டது. அவரது கைவண்ணத்தைப் பூரணமாகக் காட்டுவது ஈழத்துச் சிதம்பர புராணமாகும். கவிதையிடம் இவர் போகமாட்டார். கவிதை இவருக்கு வந்து கொண்டிருக்கும். இந்தப் புராணத்தைப் போன்ற ஒன்றை இப்போது பாடத் தமிழ்நாட்டிலும் ஆட்களில்லை என்றுதான் சொல்லலாம்.

யாழ். கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகத் தலைவரும்,
கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
முன்னாள் அதிபரும் ஆகிய

## திரு. சி. சிவகுருநாதன் எம். ஏ.

பண்டிதர் புலவர்மணி இளமுருகனாரின் பருவுடல் மறைந்துவிட்டதெனினும், அவர் அடியிட்டு வைத்த ஒரு தனிப்பெரும் இயக்கம் அவரைச் சிரஞ்சீவியாக்கியிருக்கிறது. புனிதமான புலவர் பரம்பரையிற்றோன்றிய இளமுருகனார், தமது தந்தையாராகிய சோமசுந்தரப் புலவர் பெருமானுருடைய சால்பினையும் தனித் தமிழ்த் தந்தையாம் மறைமலையடிகளாரின் புலமையினையும் பெற்று, ஈழத் தமிழ்த் திருநாட்டில் செம்மைசேர் செந்தமிழுக்கோர் ஒப்பற்ற நிலையைத் தேடித் தந்துள்ளார். இன்தமிழின் இலக்கண வரம்புக்கும் இலக்கிய மரபுக்கும் ஓர் ஒப்பற்ற அரணாக விளங்கி, அவற்றை மீறுவோருக்குப் போர் முருகனாக மாறி, "நெற்றிக் கண்ணைத் திறக்கினும் குற்றம் குற்றமே" எனச் சிவனோடு மாறுபட்ட நக்கீரனும் நாணும் நிலையெய்தி, தம் மதம் நாட்டிய தமிழ் வீரர். நீர்வழிச் செல்லும் புணைபோல் நெஞ்சங் கலந்த மாணாக்கர் பலர் எண்டிசையிலும் புகழ் மணக்கத்

தண்மதி சூழ் தாரகைபோல் விளங்குகின்றனர். இவர்கள், தம்மாசான் செந்தமிழ்த் தாயின் கமலபாதங்களிற் படைத்து வணங்கிய அச்சுவாகன மேறிய நூல்களை மறுபதிப்புச் செய்தும், கையெழுத்துச் சுவடிகளாகவிருக்கும் அரும்பெரும் நூல்களை வெளியீடு செய்தும் அன்னாரது பெரும்பணிகளைத் தொடர்ந்து அவரது ஆன்மா சாந்தியடையச் செய்தல் வேண்டும்.

எமது கழகத்துக்குப் புலவர்மணியவர்கள் அவ்வப்போது செய்துவந்த உதவிகளை, குறிப்பாக எங்கள் சிவஞானசித்தியார் வெளியீட்டுக்கு மனம் மிக மகிழ்ந்து பாடி வழங்கிய வாழ்த்துரையையும், எழுதித் தந்த திருவிளங்கம் அவர்களது வரலாற்றையும் நாங்கள் என்றும் நன்றியறிதலோடும் பணிவன்போடும் நினைவு கூருவோம். செயற்கரியவற்றைச் செய்து இகத்தில் அடைய வேண்டியவற்றை அடைந்த பெரியாருடைய ஆன்மா, பரத்தில் என்றும் வாடாத இறைவனுடைய மலரடியைச் சேர்ந்து இன்புறுவதாக.

## திரு. தி. க. இராசேஸ்வரன் பீ. ஏ.

சிதம்பரம்.

ஈழத்துச் சிதம்பர புராணம் புலவர்மணி இளமுருகனாரால் இயற்றப்பட்டது. இஃது அண்மையில் எழுதப்பட்டதாயினும் தமிழிலுள்ள புராணங்களின் இலக்கணங்கள் பலவும் அமைந்து காணப்படுகிறது. காரைநாட்டில் மருத நிலங்களின் களை பறிக்கும் கடைசியர் வனப்பை வர்ணித்திருக்கும் அணி நயம் மிக்கது. (செய்யுள் "ஒளிமுகத்தினுக் கொண்மதியொக்குமோ" என்று தொடங்குவது.)

## வித்துவான் க. முருகேசன்

காரைநகர்.

புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள் பாவிசைக்கும் பழங்குடி மரபிற்றோன்றியவர்; ஈழத்துக் கம்பனென இசைக்கும்வகை ஈழத்துச் சிதம்பர புராணமதை இயற்றி எமக்கீந்த வள்ளல்; அளப்பரிய அருங்கலைகளுக்கிருப்பிடமாய் விளங்கியவர்; எமைக் கண்டு இன்புறும் நல்லினிய மலர்ந்த முகமும், கேட்போரின் முகங்களெலாம் மலரும் வகையில் அவர்களின் உள்ளத்தைக் கவரத்தக்க விரிவுரை நவிலும் நாவும், தவறெனக் கண்டவற்றைத் தயங்காமல் எடுத்தியம்பும் மன உறுதியும், தன்னை நாடி வருவோரை உபசரிக்கும் தனிப் பண்பும் படைத்தவர்.

## திரு. ஆ. தியாகராசா எம். ஏ., எம். லிற்.

பா. உ., வட்டுக்கோட்டைத் தொகுதி.

திரு. சோ. இளமுருகனார் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தமை சைவ உலகிற்கோர் பேரிழப்பாகும். குன்றின்மேல் வைத்த தீபம் தனது ஒளியைப் பரப்பி உலக இருளை நீக்குவது போல, அன்னார் சைவமும் தமிழும் என்ற அறிவொளியைப் பரப்பிச் சைவ மக்களின் அஞ்ஞானமாகிய இருளை நீக்கி, இறை ஒளியை மக்கள் உள்ளத்தில் பதிய வைத்தார். தாம் பெற்ற அறிவை மற்றையோரும் பெற வேண்டுமென்பது இவரது அவா. அதனால் இவர் பல விடயங்களைக் கவி நடையிலும், வசன நடையிலும் யாவரும் படிக்கக்கூடிய இனிய, எளிய போக்கில் எழுதி அவற்றை அச்சுவாகனம் ஏற்றி உலகோர் அறிவைப் பெறச் செய்தமை வரவேற்கத்தக்க தொன்றாகும். ஈழத்துச் சிதம்பர தலபுராணத்தை யாத்து அதன் மூலம் அத்தலத்தின் பெருமையை உலகறியச் செய்தார். இவர் போன்ற அறிஞர்கள் எங்கள் மத்தியில் எப்போது தோன்றுவார்களெனச் சைவத் தமிழுலகம் எதிர் பார்க்கின்றது.

## ஸ்ரீ. கி. பி. ஹரன்

கொழும்பு.

புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்களின் பிரிவால் ஈழத்தில் மட்டுமன்றி, தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பலபல உள்ளங்கள் வருந்தும்.

புகழ் வாய்ந்த ஒரு தந்தைக்குப் புதல்வராகப் பிறந்த ஒருவர் புகழுடன் தலை தூக்கி நிற்பது அருமை. ஆனால், நம் புலவர்மணியோ தமது தந்தையாரின் புகழுக்கு எள்ளளவும் குறையாமல் அதனிலும் மேலாகத் தந்தையாரின் அருளாசியைப் பெற்றுப் பொலிந்து, அவர் குலத்துக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் பெருமை அளித்தார்.

இலக்கிய உலகில் அவர் ஒரு வீரர். குற்றங்கள் கண்டவிடத்து இடித்துக் கூறிக் குற்றம் குற்றமே என்று சாடும் நக்கீரர் பரம்பரையைச் சேர்ந்தவர். ஈழத் தமிழின் காவலர் அவர்.

தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்தால் அவருக்குக் கனகாபிஷேகம் செய்து ஏராளமான மானியங்கள் அளித்திருப்பர். என் செய்வோம்!

## திரு. அ. சிவபாதம்

**முன்னைநாட் செயலாளர், சைவ மகாசபை, காரைநகர்.**

தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகத்தைச் சார்ந்தவரும், தமிழ்ப் பேரறிஞரும், தாகூர்ச் சட்ட விரிவுரையாளருமாகிய திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், 1930 ஆம் ஆண்டில் காரைநகர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலையில் "சைவமுந் தமிழும்" என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். அவர்கள், மறைமலையடிகளாரின் தனித் தமிழ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். விரிவுரை முடிந்ததும் அக்கொள்கைக்கு மாறுன கருத்துடைய பண்டிதர் சி. க. அவர்கள். தமது கருத்தைக் கூறினார்கள். அக்கருத்துப் பிள்ளையவர்களை மனம் வருந்தச் செய்தது. சபையிலிருந்த இளைஞர் ஒருவர் சடுதியாக எழுந்து, பண்டிதர் சி. க. அவர்கள் கருத்தை மறுத்துப், பிள்ளையவர்கள் கருத்தை நிலைநிறுத்தினார். அந்த இளைஞரே இளமுருகனாரான பாலசுப்பிரமணியம்.

## கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் எம். ஏ., பிஎச். டி.

**இலங்கைப் பல்கலைக் கழகம்.**

புலவர்மணி இளமுருகனார் யாத்துள்ள கவிதைகளிலே தூய தமிழ் மணம் வீசுகின்றது; தெய்வீக மணம் கமழ்கின்றது; இவர்மாட்டு விளங்கும் நாட்டுப்பற்று இவரது கவிதைக்கு மேலும் நறுமண மூட்டுகின்றது. தமிழின் பெருமையை அழகுற எடுத்தியம்பும் செந்தமிழ்ச் செல்வம், இவர் தமிழ்த் தாயிடம் பூண்டுள்ள அன்பின் மிகுதியையும், அவளையிட்டுத் தமிழினம் அடையும் பீடு, பெருமை முதலியவற்றையும் சுட்டுவதோடமையாது அத்தமிழன்னையின் நிலை வேண்டப்படுமளவிற்கு ஓங்கி விளங்கவில்லையே; அவள் அரியணையில் வீற்றிருந்து அரசோச்சும் நன்னாள் எந்நாளோ என ஏங்கி நிற்கும் இவர் வேணவாவை வெளிப்படுத்தி நிற்கின்றது. புலவர்மணி திருவருட் பெருமை பேசுவதையே பெரும் பொருளாகக்கொண்டு புராணம் ஒன்றினையும் யாக்கும் வண்ணம் தெய்வத் திருவருள் தூண்டும் பேற்றினைப் பெற்றுள்ளரர்,

பாரம்பரியமான மரபு, இலக்கண இலக்கியப் புலமை, கவிபாடுந் திறமை முதலிய வாய்ப்புக்கள் நிறைந்த சூழ்நிலையில், தெய்வத் திருவருளின் தூண்டுதல் ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் அற்புத காவியம் உருவாக வழிகோலியுள்ளது

## திரு. சி. ச. குமாரசுவாமி

உரிமையாளர், ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

புலவர்மணி இளமுருகனர் அவர்கள் மறைந்தமை தமிழ் பேசும் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் அவர்கள் 1956 ஆம் ஆண்டில் தமிழிற்கு நேர்ந்த கதியை நினைந்து மிகவும் மனம் வருந்தித் தமிழின் சிறப்பையும், பெருமையையும், தொன்மையையும், தனித் தன்மையையும் விளக்கி, ''செந்தமிழ்ச் செல்வம்'' என்னும் நூலை எழுதி வெளியிட்டு, அதன் மூலம் தமது கருத்தை வெளியிட்டதுடன், அதன் சுருக்கத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து முதலமைச்சர் பண்டாரநாயக்காவுக்கும் அவரது அரசிற்கும் உணர்த்தித் தமிழ் முதன்மை பெறப் பாடுபட்டவர்.

## புலவர் சிவகருணலய பாண்டியனர்

இரத்துமலானை.

மொழியிலக்கியமுஞ் சமயவிலக்கியமுமாகித் திகழ்ந்த புராண விலக்கியத்தின் மறுமலர்ச்சியே ஈழத்தின் சிதம்பர புராணம்.

இவ்வருமைப் படைப்பு இளமுருகனருடைய மரபு வழி வருஞ் செந்தமிழ்ப் புலமைக்குஞ் சைவசித்தாந்தத் தெளிவுக்கும் உலகத்தோடொட்டவொழுகற்கும் தமது நுண்மாணுழை புலங்காட்டிக் கற்றூர்ப் பிணிக்குந்தகை பல அவாய பாவன்மைக்குந் தக்க சான்ருகி மிளிர்கின்றது.

இதனுசிரியர் பிறரைப் பின் செல்லாது தமது நூலொடு கூடிய மதி நுட்பத்திலிருந்து நயங்களைப் புதிய முறையிற் கையாளுதல் கற்போருள்ளங் கவர்வதாம்.

## சுவாமி வேலானந்தஜீ

காரைநகர்.

புலவர்மணி சோ. இளமுருகனரிடத்தில் அடிப்படைப் பண்புகளாயிருந்த இரண்டு தன்மைகளை நாம் காணலாம், ஒன்று அஞ்சாமை; மற்றது தமிழ்ப் பற்றும் சைவப் பற்றுமாகும். தமிழ் வரம்பை அழிப்பவர்களுக்கும், போலிச் சைவர்களுக்கும் அவர் சிம்மசொப்பனமாக இருந்தார், மாறுபட்ட கருத்துடையவர்களைக் கண்டவிடத்தும் ஓடி ஒளித்துக்கொள்ளாமல் அவர்களுடன் அளவளாவி விடயங்களை விளக்கி அவர்களை நல்வழிப்படுத்தும் பெருந்தகையாளர்.

அவரது ஆன்மா தில்லைக்கூத்தன் திருவடிகளையடைந்து இன்புறுக.

## வித்துவசிரோமணி ந. சுப்பையபிள்ளை

பலபட விரித்துரைப்பானேன்? சுருங்கக் கூறுகில், 'நம் புலவர்மணி இளமுருகனார், புலவர் வகையாகிய கவி, கமகன், வாதி, வாக்கி என்ற நால்வகையினர் வரிசையிலும் வைத்து எண்ணப் படும் மதிப்புப் பெற்றவர்; மேற்படி நால்வகையருள்ளே முதற் கண்ணே குறிக்கப்பட்ட கவிஞன் வகையாகிய ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்னும் நால்வகையருள் மதுரகவி வித்தாரகவிகளில் வைத்து எண்ணபபடுதற்குரிய மதிப்புப் பெற்றவர்' எனலாம்.

இத்தகையாரது மறைவு எமக்கும், எமது சமூகத்துக்கும், நாட்டுக்கும் பேரிழப்பானதாகும்.

## பண்டிதர் இ. க. முருகேசனுர்

'இன்பத்தமிழகம்', சரணவாய், கரவெட்டி.

இன்று "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்", "தமிழைப் பழித்த வனைத தாய் தடுத்தாலும் விடேன்" என்று நாமனைவரும் முழங் குகிறோம். இவ்வாறு பொங்கித் ததும்பும் தமிழ் உணர்ச்சிக்கு வித்திட்டுக் களை பிடுங்கிய பெருமை அன்று தொட்டு அல்லும் பகலும் அருந்தமிழ்ப் பணியாற்றிய புலமை பழுத்தொழுகும் புலவர்மணி சோ இளமுருகனார் அவர்களுக்கே உரியதாம் எனபது புனைந்துரையன்று. அவர் ஊசி மருந்தேற்றுவதுபோல, தமிழுணர்ச்சியை மாணவருள்ளத்தில் புகுத்தி எழுச்சி பெறச் செய்தார்.

இடரினும் தளரினும், நோய் தொடரினும் கொண்ட குறிக் கோளைக் கைவிடாது, தம் உடல், பொருள, ஆவி மூன்றையும ஒருங்கே அாப்பணித்த 'தமிழ் வள்ளலை"ப் போல ஒரு புலவனை இனி நாம் காணுதல் சாலாது.

## திரு. சு. இராசசேரம் ஜே. பி.

தலைவர், காரைநகர் வடக்குக் கிராம முன்னேற்றச் சங்கம்.

புலவர்மணி இளமுருகனார் தமிழ் பேசும் மக்களின் சுயமரியாதை காப்பாற்றப்பட வேண்டுமென்ற ஆர்வம் உடையவர். இது சம்பந்தமாக அவர் தமக்குரிய இலக்கியத் திறமையைப் பயன் படுத்திப் பேசியும் எழுதியும் வந்தார்.

புலமை என்னும் மலையின் சிகரத்தில் உலாவிக்கொண்டிருந்த பெரியவர் அவர். இதற்கு அவரியற்றிய ஈழத்துச் சிதம்பர புராணமே சான்றுகும். இப்புராணம் ஈழத்திலே தோன்றிய புராணங்களுக்கெல்லாம் சிகரமாக விளங்குகின்றது. பண்டைய புராணப் பண்பும், ஆழ்ந்த இலக்கியச் செறிவும், தமிழ்ச் சுவை மாந்தும் தண்டமிழ்ப் புலவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள் ளும் ஒழுங்கை அமைந்தது.

தமிழரசுக்கட்சித் தலைவரும்,
தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகமுமாகிய
## திரு. அ. அமிர்தலிங்கம் பீ. ஏ.

புலவர்மணி இளமுருகனார் மறைந்தார் என்று அறிந்தவுடன் கவலைகொள்ளாத தமிழ் நெஞ்சம் இருக்கமுடியாது. அரசியல், சமூகக் கருத்துகளில் அவரோடு மாறுபட்டவர்களிலும் அவரது நிறைந்த தமிழ் அறிவையும், ஆழ்ந்த தமிழ்ப் பற்றையும், சிறந்த சைவப் பண்பையும் போற்றி மதிக்காதவர் இல்லை.

கன்னித் தமிழின் கற்கண்டு இனிமையைச் சுவைக்க வேண்டுமாயின் இளமுருகனாரின் பேச்சைக் கேட்கவேண்டுமென்று இளமைதொட்டு அவர் பேச்சுக்கு அடிமையானேன். அதேபோல அவருடைய இனிய தமிழ்ப் பண்பும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. பேச்சிலும் எழுத்திலும் தூய தமிழ்ச் சொற்களைத் தெரிந்து கையாளும் அவரது நடை ஒரு தனித்தன்மை வாய்ந்தது.

தமிழால் வாழ்ந்துகொண்டு தமிழை விற்கும் கயவர் போலன்றி மிக ஆழமான தமிழ்ப் பற்று இளமுருகனாரின் தனிச் சிறப்பு. தமிழுக்காக நடந்த இயக்கங்களிளெல்லாம் அவருடைய இனிய கவிதைகள் ஒலிக்காத இடம் கிடையாது. தமிழுரிமை கோரி 1956-ம ஆண்டு திருமலை யாத்திரை சென்றபோது எமது வாய்களில் ஒலித்துக்கொண்டிருந்தது அவர் இயற்றிய,

“திருமலைக்குச் செல்லுவோம்
சிறுமை அடிமை வெல்லுவோம்”

என்ற சிந்துவாகும். அப்பாட்டில் ஓர் அடி அவருடைய தமிழ்ப் பற்றின் உறுதியைக் காட்டுகின்றது.

“கன்னியான தமிழில் ஆணை
கதிரிலங்கு காலமும்
உன்னையன்றி ஒரு மொழிக்கும்
உலகில் அடிமை ஆகமே.”

கதிரிலங்கு காலமெல்லாம் கன்னித் தமிழன்றி வேற்று மொழியை விரும்பாத புலவர்மணி மீண்டும் தமிழ் நாட்டிற் தோன்றித் தமிழ்த் தாயின் தொண்டே செய்வார் என்று என் னுள்ளம் கூறுகின்றது.

தமிழின் தூய்மை காப்பாற்றப்படும் வரை தமிழன் தமிழனாக வாழும்வரை தமிழ் உள்ளங்களிலெல்லாம் பண்டிதர் இளமுருகனார் வாழ்ந்துகொண்டேயிருப்பார்.

5

## பண்டிதர் க. மயில்வாகனனார்

**வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம்.**

செந்தமிழ்த் தாயின் சிறுமை தீர்க்க வந்து தோன்றிய நந்தா விளக்கம் புலவர்மணி இளமுருகனார் தமிழன்னைக்கு ஒளிகூட்டி உயர்வளித்த முதுபெரும் புலவர். அவர் தமிழறிஞர் இதயங்களில் ஒளி பெருக்கித் தமிழ் உள்ளவரை வாழ்வார்.

புலவர்மணி அவர்களின் தண்ணென்ற தனித்தமிழ் நடையும், வளங்கெழுமிக் கற்பனை விஞ்சிப் பெருக்கெடுத்தோடும் கவி நடையும் கேட்டார்ப் பிணிக்குஞ் செஞ்சொற் பேச்சும் தமிழ் கூறும் நல்லுலகில் என்றும் நிலைபெற்று நிற்கும்.

ஈழமணித் திருநாட்டிலும் தென்னகத்திலும் உள்ள தமிழ் வளர்க்கும் நிறுவனங்கள் எல்லாம் அவர் பேணிய — வாழ்நாள் முழுவதும் காத்தோம்பிய — தமிழன்னையின் மாண்பு மிகு மரபினைப் பேணிக் காத்தல் தலையாய கடனாகும்.

சிவநெறிப் புரவலர், திருப்பணித் தவமணி

## முதலியார் வை. மகேசன்

**சமாதான நீதவான்.**

நமது புலவர்மணி இளமுருகனாரது விரிவுரைகள், பாட்டுக்கள் கட்டுரைகள், அன்றாடப் பேச்சுக்கள் முதலியன தனிச் செந்தமிழிலேயே உள்ளன. இவர், தமது உயிரினும் மேலாகக் கலப்பற்ற செந்தமிழைப் பேணுவதில் மிகுந்த அக்கறை கொண்டவர். இவரிடமிருந்த சிறந்த பண்புகளுளொன்று சுற்றந் தழுவுதல். அது, காலக்கிரமத்தில் வளர்ந்து, தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் சிறப்புடன் உச்ச நிலையில் வாழவேண்டுமென்ற பேரார்வத்தை இவருக்கு உண்டாக்கியது.

இவராற் பாடப்பட்ட பாடல்கள், சங்க காலத்துப் புலவர்கள் பாடிய பாடலுக்கு இணையானவை என்ற பெருமதிப்பைப் பெற்றன.

இவருடைய சிறந்த படைப்பு, ஈழத்துச் சிதம்பர புராணமாகும். அதனை இலங்கை, இந்தியப் பேரறிஞர்களெல்லாம் மிகமிக வியந்து பாராட்டியுள்ளனர்.

சைவசமயத்தின் அரும்பெரும் உட்பொருள்களைத் தமது கட்டுரைகளிலும், விரிவுரைகளிலும் அலங்காரமாக வெளிப்படுத்தி, மறுசமயத்தவர்கள் வியப்படைந்து நிற்கச் செய்யுந் திறமை படைத்தவர் நமது புலவர்மணி.

இத்தகைய பெருமைகள் வாய்ந்த புலவர்மணியின் அகால மறைவு நாட்டுக்கும் தமிழுக்கும், சைவத்துக்கும் பேரிழப்பாகும்.

## திரு. மு. சிவசிதம்பரம்
தமிழர் கூட்டணி உபதலைவர்.

தமிழ் வளர்த்த குடும்பத்தில் பிறந்து, தானும் தமிழ்த் தொண்டு செய்த பண்டிதமணி இளமுருகனாரின் மறைவினால் ஈழநாடு தனது சிறந்த புதல்வர் ஒருவரை இழந்துவிட்டது.

பண்டிதமணி இளமுருகனார் அவர்கள் ஒரு நல்ல எழுத்தாளர்; பேச்சாளர்; கலா இரசிகர். எத்தனையோ கட்டுரைகளை நூல்களை — அழகான செந்தமிழில் — ஆர்வமான செம்மொழிகளில் அரிய உவமை நயங்களுடன் — எழுதியுள்ளார்.

அவர் மறைந்தாலும் அவர் தமிழுக்கு ஆக்கிய தொண்டு என்றும் நிலைத்திருக்கும். பண்டிதமணி இளமுருகனாரின் புகழுடம்பு வாழ்க. வணக்கம்.

## திரு சி. ஆ. விநாயகசிவம்பிள்ளை
இளைப்பாறிய தலைமை ஆசிரியர், காரைநகர்.

எப்படி ஆற்றுவேன்! எப்படி ஆற்றுவேன்!!

புலவர்மணி இளமுருகனாரது சிவப்பொலிவையும், கலைநிறை உள்ளத்தையும், புன்சிரிப்பையுங் கண்டா? ஈழத்துச் சிதம்பர புராணத்தில், ஆறு இல்லாத எமது ஊருக்கு "ஒழுகலாறு" ஒன்றினைப் படைத்து ஓடும்படி செய்ததனையை வியந்தா? நூலில் நிறைந்துள்ள கற்பனைக் களஞ்சியங்களை நுணுகிக் கற்றுணர்ந்தா? விழாவயர் சருக்க இறுதியில் தேன், பால், சர்க்கரைபோலத் தித்திக்கும் தோத்திரப் பாடல்களை எழுதிய ஞான அறிவினை உணர்ந்தா? அல்லது அவைகளைப் பாடிப் பாடித் தினைத்தா?

எதனை என்று அறியாது திகைக்கின்றேன்.

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

தந்தை வழியில் தமிழ்ப்புலவர் மாமணியாய்
வந்த இளமுருக னார்போல — பைந்தமிழில்
பாவன்மை மிக்குப் பலவேறு நூல்புனைய
யாவருளர் இங்கே இனி.

## திரு. வே. குமாரசுவாமி

காரைநகர்.

கம்பர் இவரென்றே கற்றவர்கள் போற்றநிதம்
இம்பரின் கணின்ற இளமுருகே — உம்பருக்கு
பூரணனார் நற்கதையும் பொற்புராண முஞ்சொல்ல
நேராகச் சென்றீரோ நீர்.

நல்லுரையை நாமிழந்தோம் நாடகச்சீர் நாமிழந்தோம்
பல்லணிசேர் பாக்கள் பலவிழந்தோம் — சொல்லரிய
நாத நயமிக்க நங்கள் இளமுருகே!
வேதனடி தானே விருப்பு.

## அருட்கவி சீ. விநாசித்தம்பி

அளவெட்டி.

சிறந்த பொருளமைத்துச் சீவரெல்லாம் அன்பில்
அறந்தழைக்கும் செம்மை யடக்கித் — திறஞ்சேர்
இளமுருக னார்படைத்த இத்தலபு ராணம்
மிளிரடியார்க் கேற்றும் விளக்கு.

ஏற்றசுந்த ரேசனா ரின்பப் புராணத்தைப்
போற்றிப் படிக்கப் புலன்களெலாம் — ஆற்றருவி
ஒப்பச் சுரந்துயிரும் ஊனு மினிப்பதெனிற்
செப்பும் தகைத்தோ சிறப்பு.

## மட்டுநகர்ப் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை.

உளமுருக உணர்வுருக உடலுருக ஓதுமவர்க் குவந்து கேட்போர்
களமுருகிக் கண்பனித்து மெய்சிலிர்ப்பக் காதலினாற் கமழ்பூஞ் சோலை
வளமுருகு துதைந்தாடும் வண்டினம்போற் கூட்டுண்டு மகிழ்நர் சூழ
இளமுருக னீழத்துச் சிதம்பரபு ராணமிதை இயற்றினானே.

இணுவையூர்ப் பண்டிதர், வித்துவான், சைவப்புலவர்,

## இசைமணி இ. திருநாவுக்கரசு

செந்தமிழ்த்தாய் மங்கலநாண் காக்கும் வீரன்
சீரில்லா வுரைநடைக்குச் சீறுஞ் சிங்கம்
முந்தவையி லமுதமழை பொழியும் மேகம்
முனிவரைப்போற் கண்டனங்கள் தீட்டும் மேதை
வந்தடைந்த மாணிகளுக் கறிவுச் செல்வம்
வரையாது வழங்கிவரும் காம தேனு
செந்தமிழிற் சுருக்கெழுத்துப் பனுவ லுக்குச்
சீரான சூத்திரங்கள் செய்த நூலோன்,

## திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) பீ. ஏ.

மன்னுமியற் றமிழ்மொழியின் மாண்பை யின்பை
மனமலர்த்தி யருட்டேனை மல்கும் பாங்கை
தன்னறிவா லன்புணர்வான் முகந்தே மேற்செல்
தண்ணளிசேர் தமிழ்மேகம் நவாலி யூரின்
மன்னுபுல வன்சோம சுந்த ரத்தின்
மைந்தனிவ னிளமுருகன் மகிமை யாளன்
தன்னிகர்தா னெனவெவருந் தலைமேற் கொள்ளுந்
தகைமையுளா னியற்றினனே தலபு ராணம்.

## பௌராணிக வித்தகர் பிரமஸ்ரீ வ. குகசர்மா
தெல்லிப்பழை.

இன்றமிழ் இனிமை காட்டும்
இயல்புடை ஆசான் என்கோ!
பொன்றிகழ் தங்கத் தாத்தா
புரிந்திடு முதல்முத் தென்கோ!
வன்றிறற் சைவம் ஓங்க
வாழ்ந்திடு புலவன் என்கோ!
இன்றிள முருகன் தன்னை
இயம்புவ தெவ்வா றேதான்.

## பண்டிதர் சபா. ஆனந்தர் பீ. ஏ. (லண்டன்), பீ. ஓ. எல். (சென்னை)
இணுவில்.

தங்கநிகர் தாத்தாவென் றுலகோர் போற்றுந் தனிக்கவிஞன்
பெரும்புலவன் சான்றோன் செஞ்சொல்
பொங்குகவி யமுதமழை பொழிந்தோன் மைந்தன் புகழோங்கும்
திண்ணபுரங் கோயில் கொண்டே
அங்கருள்செய் புத்தேளிர் புதுமைக் காதை அடியடைந்த
மெய்த்தொண்டர் காதை யாதி
பங்கமிலா வீரைந்து சருக்கமாக்கிப் பழையமர
பழியாமற் பாடி னனே.

கற்றோருக் கினியதொரு கனியமுதாய்க் கவிப்பெருக்காய்க்
கருத்தை யீர்க்கும்
வற்றாத பேராறாய் வளம்பெருகு வண்டமிழின் வனப்பைக் காட்டி
சொற்றோறும் நயம்பெருகச் செவிப்புலத்திற் செந்தேனைச்
சொட்டச் சொட்டக்
குற்றாலத் தருவியென விளமுருகன் கொழிதமிழாற் கூறி னனே.

### திருமுறை இசைமணி, சி. செல்லத்துரை

துலங்குபெருங் காப்பியத்தின் மரபுநாடித் தூயபுரா
    ணமரபும் தோன்ற வைத்தே
இலங்குமொண்பா விருத்தத்தில் உயர்ந்தகம்பன் இன்றுமுளான்
    என்றுரைக்க இனிதுதேர்ந்து
விளங்குசந்தம் உவமையுரு வகமும்மற்றும் வீறுடைய
    அணிபலவும் விரவவைத்து
நலங்கனிய ஈழச்சிதம் பரப்பு ராணம் நவின்றஇள
    முருகனெனும் புலவன் வாழி.

### வல்வையூர்ப் பண்டிதர் சங்கர. வைத்தியலிங்கன்

இளமுருக னெத்திசையு மேத்திக் காத்த
    விசைமுருகன் றமிழன்னை யிதையத் துற்ற
வளமுருக னரனிணைமென் மலர்த்தாள் பாடு
    மதிமுருகன் றமிழினத்தின் மானங் காக்குங்
களமுருக னியற்புலவர் கருத்தின் மேவு
    கவின்முருகன் கலைவாணி கருணை யுள்ளத்
தளமுருக னிமையவரூர் சார்ந்த பின்னர்ச்
    சவிகுன்றித் தமிழுலகந் தாழ்ந்த தம்மா.

யாழ்ப்பாணத்து இளவாலையூர்

### வித்துவான் ச. அடைக்கலமுத்து. (அமுது)

எழுத்தறியார் யாப்பறியா ரிக்காலக் கவிஞர்
    இன்றமிழி னொலியறியார் பழந்தமிழு மறியார்
வருந்துகின்ற பாடல்வகை ஒருகோடி கண்டோம்
    மாதேஎந் தமிழரசி வாழ்வுனக்கு முண்டோ;
கழுத்தினிலே கைவைப்பா ரென்றிருக்கும் வேளை
    கற்கண்டுஞ் சருக்கரையும் முக்கனியுஞ் சேர்த்துப்
பழுத்ததமிழ்ப் பாவலனார் சிதம்பரத்தை வைத்துப்
    பாகொன்று திரட்டிடவே உண்டுவகை கொண்டோம்.

கலைமகளே இளமுருகர் குலத்தின் தெய்வம்
    காவியங்க ளவரணைக்குங் காதற் பெண்டிர்
விலைமதியாக் கவிதைகளே யினிய தோழர்
    வித்தகர்க ளவருக்குப் பிள்ளைச் செல்வம்
அலையுருட்டு மணிபோலத் தூய சொற்கள்
    அள்ளியதே நிதியமென்னுங் குழந்தை யுள்ளம்
இலைமுழுதுங் கனிதூங்கும் மாவைப் போல
    இனியகுணக் குன்றத்தின் இயற்கை யீதே.

## வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை பி. ஏ.

நலங்கள் யாவுந் துலங்குமொரு நன்னூற்புலவ னிளமுருகன்
புலவர்மகனற் கவிஞர்மணி புராணந்தந்த புலவர்மணி
திலக மென்னத் திகழ்கின்ற தேசமீழம் பெருமைபெற
உலகம் வாழுங் காலமெலா முயர்ந்தேவாழு மிவன்புலமை.

## கவிஞர் பிரான்

தாரமாய்த் தாயானாள் கைதனக்கே பாப்புனைந்த
பேராசான் பெரும்புலவன் சோமசுந் தரன்பெற்ற
சீராளன் இளமுருகன் சிந்திக்கும் மெய்ப்புலவன்
காரரீளன் கவிஞர்பிரான் கண்ணுதற்கே விருந்தானான்.

அ. பஞ்சாட்சரம்,
உருப்பராய்.

## கோவை மகேசன்

ஆசிரியர், சுதந்திரன்.

புலவர்மணி இளமுருகனாரின் பிரிவு கேட்டுத் திடுக்கிட்டேன். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற நக்கீரப் புலவனின் பரம்பரையில் வந்துதித்த தமிழ்ப் பெரும்புலவர் அவர். ஈழத்தில் தனித் தமிழியக்கத்தைப் பரப்பி — தன்னுடைய பெயரையே தூய தமிழ்ப் பெயராக மாற்றிக்கொண்டு — தமிழ் வளர்த்த புலவர்மணியின் இடத்தை நிரப்பிட இனி யாரோ உளர்? தமிழ்க் கல்வித்துறையில் ஒரு நிறை குடமாகவும் — தமிழ்ப் பண்பாட்டின் எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்த புலவர் மணி தமிழரசுக் கட்சியின் ஆரம்ப நாள்களில் கட்சி மேடைகளில் எழுப்பிய தமிழ் முழக்கமும் — திருமலை யாத்திரையின் போது அவரால் எழுதப்பட்டுத் தமிழ் மக்கள் அனைவராலும் முழங்கப்பட்ட வழிநடைச் சிந்தும் இன்றும் என் காதுகளில் ஒலித்த படி இருக்கின்றன. தமிழ் ஈழத்தின் இளைய மாவீரன் தம்பி சிவகுமாரன் தமிழுக்காகத் தன்னுயிர் நீத்தபோது — புலவர்மணி அந்த வீரனைப் பற்றிப் பாடிய கவிதையை இன்று படிப்பினும் உள்ளம் சிலிர்த்தெழும்.

தமிழும், தமிழினமும், தமிழ் ஈழமும் தலை நிமிர்ந்து வாழ்ந்திட நாம் அனைவரும் உழைப்பதே புலவர்மணியின் ஆன்மசாந்திக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறாகும்.

# என் பார்வையில் இளமுருகனார்.

புலவர்மணி இளமுருகனாரோடு பல ஆண்டுகளாக நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவருடைய சிந்தனையும் வாழ்வும் தமிழ், சைவசித்தாந்தம் என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டன. அவர் மனிதனாக — மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்து, நடக்கும் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தார். ஆனால், வசதிக்கும் நேரத்திற்கும் ஆட்களுக்குமேற்பத் "தாளம்" போடுங் கலையை அவர் கற்றாரல்லர். உத்தியோகத்திலோ, செல்வத்திலோ, அதிகாரத்திலோ, அந்தஸ்திலோ உச்சமான நிலையிலிருப்பவர்கள் தவறு செய்தாற்கூட நாவலர் பெருமானைப் போல கண்டித்துப் பேசியும் எழுதியும் வந்தார்.

அவர் சொல்லின் செல்வர். கண்டனப் பேச்சுக்களை நிகழ்த்தும்போது இலக்கியத்திற் காணும் உவமைகளும் உருவகங்களும் புதிய வடிவததில் மழுவாயுதங்கள் போலக் கிளம்பும். அவரது அம்பறுத்தூணியில் நாகாஸ்திரமிருந்தது; அக்கினியாஸ்திரமிருந்தது; பாசுபதாஸ்திரமிருந்தது. இவையெல்லாம் தவறு செய்பவர்களது மார்பிற் பாய்ந்து, அவர்களை நல்வழிப்படுத்தும் தன்மை வாய்ந்தன. கண்டன மரபு நச்சினார்க்கினியர் மரபு — சேனாவரையர் மரபு — சிவஞானமுனிவர் மரபு — நாவலர் மரபு. புலவர்மணி அவர்களும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் கண்டனக் குரல்கள் எழுப்பாதிருந்தால், யாழ்ப்பாணத்தில் சைவ மரபும், தமிழ் மரபும் இருந்த இடம் தெரியாமல் ஒளித்துக்கொள்ள, பொதுச்சமயமும், புதுத்தமிழும், மாயாவாதமும் தாண்டவமாடியிருக்கும். இதனை யான் தெட்டத் தெளிவாக, அந்தரங்க சுத்தியுடன் கூறுகின்றேன்.

புலவர்மணியை ஒரு சாரார் தனித் தமிழ்ப் பித்தர் என்பர். இன்னொரு சாரார் கண்டனப் புலி என்பர். பிறிதொரு சாரார் ஆரியத்தையும் தமிழையும் போற்றுபவர் என்பர். மற்றொரு சாரார் புதுமையை முற்றாக வெறுப்பவர் என்பர். இன்னும் பல பலவாறாகக் கூறுவர். இவர்களுக்கெல்லாம்,

"ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ணெ ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே,,

என்னுஞ் செய்யுளே விடையளிக்குமென்று கூறி, எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்.

க. வைத்தீசுவரக் குருக்கள்,
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
காரை நகர்.

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.